"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"


# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி - 2008



"ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள்"

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்



தரமான தங்கத்திற்கு
இலண்டனிலே சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

மணி 16

# கலசம்
KALASAM

ஒலி 59

www.sms.info
E-mail: kalasam @ gmail.com

# மற்றவர்கள் செய்கிறார்கள்!

நம்முடைய சைவ சமயத்திலே எண்ணற்ற சமயச் சடங்குகள், கிரியைகள் என்று உள்ளன. இன்று நம்மிலே பலருக்கு இவற்றை ஏன் செய்கிறோம், அவற்றின் விளைவு என்ன என்பதெல்லாம் தெரியாது. ஆனால், தெரியாவிட்டாலும் செய்யவேண்டும் என்பது ஒரு சாரார் வாதம். தெரியாமற் செய்யவேண்டுமா? அதனால் என்ன பலன்? என்பது இன்னொரு சாரார் வாதம். காரணமும் தெரியாமல் தெரிந்துகொள்ளவும் முயலாமல் ஒரு சாரார் இவையெல்லாம் மூடநம்பிக்கை என்றும் வாதிடுவர். நமக்குத் தெரியாததால் ஒன்று இல்லை என்று ஆகிவிடாது. நாட்டுக்கு நாடு சில கிரியைகள் திரிபடைந்து மாறிவிட்டதும் இதற்கு ஒரு காரணம்.

அன்பர் ஒருவர் தீர்த்தமாடச் சென்றார். பத்தியுடன் அவர் தீர்த்தமாடி வழிபாட்டை முடித்துக்கொண்டு வர அவருக்கு நன்மைகள் பல வந்தன. இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர், 'நானும் இப்படித்தானே செய்தேன். எனக்கேன் எதுவும் நடக்கவில்லை?' என்று ஆராய்ந்தார். முதலாமவர் நீராடியபோது அவரிடம் தீர்த்தக்கரையில் நின்ற கழுதையின் முடி சேர்ந்திருந்தது என்று கண்டுபிடித்தார். அவ்வளவுதான். கதை பரவியது, கழுதை மொட்டையானது. மற்றவரின் பாவ புண்ணியங்களையோ தன் தகுதிகளையோ பற்றி அவர் சிந்திக்கவேயில்லை.

இன்று நம்மிற் பலர் இப்படித்தான் இருக்கிறோம். மற்றவரைப்போல நாமும் இருக்கவேண்டும் என்று நினைக்கிறோம். மற்றவர்கள் என்ன செய்கிறார்களோ அதையே நாமும் செய்ய முயல்கிறோம். பக்கத்து வீட்டுக்காரரைப் பார்க்கிறோமே தவிரப் படித்தவர்களைப் பார்ப்பதில்லை. நமக்கு முன் வாழ்ந்த ஞானிகள், அறிஞர்கள், முனிவர்கள் சொன்னவற்றை நாம் கவனிப்பதேயில்லை. அவர்களைவிட நாம் அறிஞர்கள் என்றே நினைக்கிறோம். இது தவறு. மற்றவர் வழிநடவோம், கற்றவர் வழிநடப்போம்.

ஆசிரியர்

## நிர்வாகக் குழு

திரு. க. ஜெகதீசுவரன் திரு. ச. ஆனந்ததியாகார் திரு. சி. அற்புதானந்தன் திரு. சி. தம்பு
திரு. சு. வைத்தியநாதன் திரு. வ. இ. இராமநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732
smsuk77@yahoo.co.uk

# இந்த இதழில்


| | |
|---|---|
| பெருஞ்சாந்தி விழா | 03 |
| முருக தத்துவம் | 04 |
| காரைக்கால் அம்மையார் - பெரியபுராணத் தொடர் | 06 |
| உயர்ந்தோர் செய்கை - கந்தபுராண சிந்தனைகள் | 09 |
| காயத்திரி மந்திரம் | 13 |
| ஜோதிடத்தொடர் | 16 |
| அருட்கூத்தன் - ஆடலரசன் திருவுருவங்கள் | 18 |
| G U போப் | 31 |
| ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயில்-கேரளபயணக்கட்டுரை | 33 |
| எழுத்துப் பிழை அற.... | 36 |
| சிறுவர் கலசம் | 37 |

சைவ முன்னேற்றச் சங்க மண்டபத்திலே ஸ்ரீ சிவகாமி அம்மை உடனுறை ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் திருவுருவத்தைத் தாபிப்பதாக எழுதியிருந்தோம். சிதம்பரத்திலே உள்ள அமைப்பைப்போலவே அமைந்துள்ள இந்த வழிபாட்டு மண்டபம் பார்ப்பதற்கு அழகாகவும் மனதுக்கு அமைதியைத் தருவதாகவும் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் கூரையும் சிதம்பரத்திலே உள்ளதுபோலவே 21600 ஓடுகளால் வேயப்பட்டுள்ளது. அதிலே 72000 ஆணிகள் உள்ளன. இந்த ஓடுகளின் எண்ணிக்கை நமது



# பெருஞ்சாந்தி விழா

சுவாசத்தையும் ஆணிகள் நமது உடம்பில் உள்ள நாடிநரம்புகளையும் பிரதிபலிக்கின்றன. மண்டபத்தின் முன்னால் நந்தி பலிபீடம் ஆகிவையும் அமைந்துள்ளன.

சென்ற ஜூன்மாதம் இருபத்திரண்டாந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சைவ முன்னேற்றச் சங்க மண்டபத்திலே ஸ்ரீ சிவகாமி அம்மை உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் மூர்த்தியையும் விநாயகரையும் தாபிக்கும் வைபவம் நடைபெற்றது. இத்தினத்துக்கு முதல் நான்கு தினங்கள் முன்னதாகவே அதற்கான கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டன. சங்க மண்டபத்திலே யாகசாலை தாபித்து சிவாசாரியர்கள் கிரியைகளைச் செய்தார்கள். நான்கு தினங்களும் நடந்த யாகபூசைகளின்போது கலை நிகழ்வுகளும் நடந்தன. இந்த நிகழ்ச்சியிலே கலந்து சிறப்பிக்கவெனச் சிதம்பரத்திலே இருந்து சிவஸ்ரீ இரத்தினதாண்டவ தீட்சிதர் அவர்கள் வந்திருந்தார்கள். அவர்களுடன் சிவஸ்ரீ கைலை நாகநாதசிவம் குருக்கள், சிவஸ்ரீ சங்கரக்குருக்கள், சிவஸ்ரீ தேவலோகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ கணேசக்குருக்கள், சிவஸ்ரீ ரமேஷ் குருக்கள், சிவஸ்ரீ பாலவசந்தக் குருக்கள் ஆகியோர் கலந்து கிரியைகளைப் பத்தி சிரத்தையோடு செய்தனர்.

ஞாயிறு காலை 6 மணிக்குக் கிரியைகள் ஆரம்பமாகி அபிஷேகங்கள் விமானத்துக்கும் உள்ளே விக்கிரகங்களுக்கும் நடைபெற்றன. சுமார் நூறு பேருக்கு மேல் இந்த அற்புதக் காட்சியைத் தரிசித்து மகிழ்ந்தனர். தொடர்ந்து மண்டல பூசை நடைபெற்று வருகின்றது.

**இந்த வழிபாட்டிடம் தினமும் மாலை 6 மணிமுதல் 9 மணிவரை வழிபட வருவோருக்குத் திறந்திருக்கும்.**

**விசேஷபூசை, வழிபாடு செய்யவிரும்புவோர் சங்கப் பணிமனையைத் தொடர்பு கொள்ளவும்: 0208 514 4732**

# முருக தத்துவம்

## சோ.பத்மநாதன்

முருகப் பெருமானைச் சிவகுமாரன் என்பது மரபு. சிவனுடைய நெற்றிக் கண்ணில் தோன்றிய ஆறு பொறிகள் சரவணப் பொய்கையை அடைந்து ஆறு குழந்தைகள் ஆகி, கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு, பின் உமையம்மை அணைக்க ஓருருவாயின என்பது கந்தபுராணச் செய்தி. புராணச் செய்தி இதுவாக, தத்துவம் என்ன சொல்கிறது? அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய் நின்றது சிவபரம் பொருள். அதுவே ஆறுமுகமும் பன்னிரு கரமும் கொண்டு முருகனாய் வந்தது என்கிறார் கச்சியப்பர். சிவபிரான் திருவாக்கால்,

'ஆதலின் நமது சத்தி
அறுமுகன் அவனும் யானும்
பேதகம் அன்றால் நம்போல்
பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான்
யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும்
போற்றினர்க் கருள வல்லான்'

சிவனும் முருகனும் ஒன்றேயென நிறுவப்படுகிறது.

அருவம் உருவம், அருவுருவம் என்ற மூன்று நிலையிலும் நிற்பதும், ஆதியும் அந்தமும் அற்று நிற்பதும், ஒன்றாய்ப் பலவாய் நிற்பதும், சக்தியைப் பிரியாதிருப்பதும், முற்றறிவுடையராய் இருப்பதும், தன்னை வழிபடுவோருக்கு ஞானமும் வீடும் அருளுவதும் சிவன் செயல்கள். இவையே முருகன் அருட் செயல்களாகவும் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

முருகனுக்கு வாகனம் மயில். தோகையை விரித்த மயில் ஓங்கார வடிவைக் காட்டும்

'ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்டது
ஆடுமயில் என்று தெரியேனே'
என்று திருப்புகழிலும்

'ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே
முருகன் உருவங்கண்டு
தூங்கார்..........'

என்று அலங்காரத்திலும் அருணகிரியார் இவ்வுட்பொருளை விளக்குவார்.

முருகனுக்குக் கொடி சேவல். அது 'கொக்கறு கோ' (மாமரமாகிய சூரனை வீழ்த்திய அரசே) என்று கூவுகிறது. சேவல் (காலை) ஒளியைக் கண்டு கூவும். மயில் மழையிருளைக் கண்டு ஆடும். முருகன் ஒளிக்கும் இருளுக்கும் நடுவே இருக்கிறான். மயிலின் நடனம் கண்ணாற் காணக் கூடியது - உருவம், சேவலின் கூவல் காணமுடியாதது - அருவம். உருவம் உளது, அருவம் இலது. முருகன் உருவுக்கும் அருவுக்கும் நடுவே இருக்கிறான்.

'உருவன் றருவன் றுளதன் றிலதன்று
இருளன் றொளியன் றெனநின் றதுவே
முருகன்' என்று அநுபூதி முழங்கும்.

முருகப் பெருமான் சூராதி அவுணரைச்

சங்கரித்தான் என்கிறோம் சூரன், சிங்கன், தாருகன் மூவரும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் வடிவங்கள். போரில் முதலில் தாருகனும், பிறகு சிங்கனும் மாய, ஈற்றில் சூரபத்மனே பொருதுகிறான். அவன் சாவது இல்லை. சேவலும் மயிலும் ஆகி முருகனுக்குத் தொண்டு புரிகிறான். இதன் உட்பொருள் என்ன? சைவ சித்தாந்தத்தில், ஆணவம் மூலமலம் எனப்படும். அது அழிவதில்லை, தன் வலி குன்றும் அவ்வளவே. உலகியலிலும் இந்த ஆணவத்தை யாராலும் ஒழிக்க முடிவதில்லை என்பதறிவோம். இவ்வாறு, முருகதத்துவம், ஆராய்வாருக்கு அறிவுச் சுரங்கமாய் விளங்கக் காணலாம்.

ஈழ நாடு முருக வழிபாட்டுக்குப் பேர் பெற்றது. வடக்கே மாவிட்டபுரம், செல்வச் சந்நிதி, நல்லூர். தெற்கே கதிர்காமம். கிழக்கே மண்டூர், வெருகல் என முருகப் பெருமானுக்குக் கோயில்கள். இவை தவிர இணுவில், கோப்பாய், பறாளை, நுணசை முதலிய சிற்றூர்களில் ஆங்காங்கு முருகன் அருளாட்சி நடக்கிறது.

ஈழ நாட்டு முருகன் கோயில்களுட் பாடல் பெற்றது கதிர்காமம். இத்தலத்துக்கு அருணகிரியார் பாடிய பதினொரு திருப்புகழ்ப் பாடல்கள் உள. கதிர்காமத்தில் நிகழ்வது ஆகம வழிபாடு அல்ல. ஆங்கு மந்திரங்கள் இல்லை. மூலஸ்தானத்தில் யந்திரம் உண்டு. பண்டு வேடர்கள் முருகனை வழிபட்ட தலமல்லவா?



'வனமுறை வேடன் அருளிய பூசை
மகிழ்கதிர் காமம் உடையோனே'
என்றுதான் அருணகிரியார் பாடுகிறார்.

இன்று முருக வழிபாடு தமிழ்நாடு, ஈழ நாடு என்ற எல்லைகள் தாண்டித் தமிழர் வாழும் லண்டன் முதலிய புகலிடப் பெரு நகரங்களிலும் பரவியுள்ளமை காணலாம்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

**இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில் உற்சவ சிறப்புக்கட்டுரை**

# காரைக்கால் அம்மையார்

மூ.சிவராசா

பெரியபுராணத்திலே போற்றப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் பெண்கள் மூவர். அவர்களே மங்கையர்க்கரசியார், காரைக்கால் அம்மையார், இசை ஞானியார் என்பவர்கள். சில திருக்கோயில்களில் இவ்வறுபத்து மூன்று நாயன்மார்களின் திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இவற்றை அவதானித் தீர்களா? மற்றை எல்லாருடைய திருவுரு வங்களும் நின்ற திருக்கோலத்தில் அமைந் திருக்க, காரைக்கால் அம்மையாரின் திருவு ருவம் மட்டுமே இருந்த திருக்கோலத்தில் அமைந்திருக்கும். கைலாசபதியே அவரைத் தமது தாயாகக் கொண்டு 'அம்மையே' என்று அழைத்த காரணத்தால் அவர் பெற்ற பேறாகலாம். தசைகள் முற்றும் நீங்க எலும்பு உடம்பே கொண்ட பேய் வடிவை வேண்டிப் பெற்று, கைலை மலையிலும் ஆலங்காட்டிலும் காலால் நடவாமல் தலையால் நடந்து பெருமான் சந்நிதானம் அடைந்த பெருமை யுடையவர் அம்மையார். அவரின் வரலாற் றைப் பார்க்கலாம்.

காரைக்கால் என்ற ஊரிலே தனதத்தன் என்ற வணிகனின் மகள் புனிதவதியார், பரமதத்தன் என்ற வணிகனுக்கு மனைவியானார். இல்லொ ழுக்கத்திலே சிறந்தவராயத் தம் வீட்டுக்கு வரும் சிவனடியார்களுக்கு உணவும் உடையும் பொருளும் உதவும் பண்புடையவராய் இருந்தார். பரமத்தன் பணிபுரியும் இடத்தில் அவனுக்கு ஒருநாள் இரண்டு மாம்பழங்கள் கிடைத்தன. அவன் அவற்றை வீட்டுக்கு அனுப்பிவைத்தான். அன்று அவன் வீட்டுக்கு சிவனடியார் ஒருவர் பசியோடு வந்தார். அவருக்கு உணவளிக்க அம்மையார் ஆயத்தமானார். சோறு தயாராக இருந்தும் கறிகள் தயாராக்கப்படாத வேளை. எனவே அம்மையார் அடியவருக்கு ஒரு மாம்பழத்தை வியஞ்சனமாக வைத்து பசியாற்றி அனுப்பினார்.

பரமதத்தன் பகற்போசனம் பண்ணும்பொழுது அம்மையார் மீதிருந்த மாம்பழத்தை அவனுக்குப் படைத்தார். பழம் நல்ல சுவையாக இருந்ததால் அவன் மற்றை மாம்பழத்தையும் தரும்படி கேட்டான். நடந்த நிகழ்ச்சியை வெளிப்படுத்தத் தயங்கிய புனிதவதியார் அதை எடுத்து வருவதற்கு உள்ளே போவாராய் இறைவனைப் பிரார்த்தித்தார். இறையருளால் கனியொன்று கிடைத்தது. அதனைக் கணவனின் இலையிற் படைத்தார். அது முன்னைய கனியிலும் அதிக சுவையுடையதாக இருக்கவே பரமதத்தன் தனது ஐயத்தைக் கூறி விவரம் கேட்டான். இறை அருளை வெளிப்படுத்தக் கூடாமை யிலும் கணவனிடம் பொய் பேசல் தவறாம் என்பதால் நடந்த விவரத்தை அம்மையார் கூறினார். அதனை நம்பாத பரமதத்தன் இறையருளால் கனி கிடைத்தது உண்மையானால் 'இன்னும் ஒரு கனி பெற்றுத் தா' எனக் கேட்டான். அம்மையார் மீண்டும் உள்ளே சென்று இறையருளை வேண்டினார். மற்றும் ஒரு மாம்பழம் அவர் கையிலே வந்தது. கொணர்ந்து கணவனிடம் கொடுத்தார். அவன் கையிற் கிடைத்த கனி சட்டென மறைந்தது. மனம் தடுமாறிய பரமதத்தன் புனிதவதியாரைத் தெய்வமென நினைத்து அவரைப் பிரிந்துவாழ முடிவுசெய்தான். சில நாட் செல்ல, வணிக நோக்கில் மரக்கலம் ஏறிப் பிறதேசம் போனான். திரும்பி வரும்போது காரைக்கால் வராமல் பாண்டிநாட்டில் ஒரு பட்டினத்திலே தங்கி வணிகம் செய்தான். அங்கு வேறொரு பெண்ணை மணம் செய்து பெண் மகவு ஒன்றும் பெற்றெடுத்தான். தான் தெய்வமாகக் கருதிய புனிதவதியாரின் பெயரையே தன் மகளுக்குச் சூட்டினான்.

காரைக்காலில் இருந்த புனிதவதியாரின் சுற்றத்தார் பரமதத்தனின் செய்கை அறிந்து

புனிதவதியாரை அவரது கணவனிடம் சேர்த்து வைப்பதற்காக அவரையும் அழைத்துக் கொண்டு பரமதத்தன் இருந்த ஊருக்குப் போனார்கள். அவர்கள் வரவை அறிந்த பரமதத்தன் தன்னுடைய புதுக்குடும்பத்துடன் அவர்களை அடைந்து மனைவி மகளுடன் தானும் அம்மையார் காலில் விழுந்து வணங்கினான். அவர் ஒதுங்க, சுற்றத்தார் கோபிக்க, பரமதத்தன் நிகழ்ந்தவற்றைக் கூறி அவர்களையும் அம்மையாரை வணங்கச் சொன்னான். அதுபோது புனிதவதியார் கணவனுக்கு வேண்டாத உடலின் தசையை நீக்கி, எலும்பு உருவைத் தரும்படி இறைவனை வேண்டினார். அவ்வாறே அவருக்குப் பேய் வடிவு கிடைத்தது. திருவருளாற் கிடைத்த ஞான உணர்வு கொண்டு அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை பாடினார். எற்புடம்புடன் கைலையை அடைந்து காலினால் அன்றித் தலையால் நடந்து மலை உச்சிக்குப் போய்ச் சிவன் சந்நிதி சேர்ந்தார். அவர் உருவையும் அன்பையும் கண்டு உமையம்மை இவர் யாரெனச் சிவனை வினவ, ‘வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே’ எனச் சிவன் விடையிறுத்தார். பின் அம்மையாரை வேண்டும் வரம் கேட்கச் சொன்னபோது ‘நிலைத்தஅன்பு’, ‘பிறவாமை’, ‘பிறந்தால் உன்னை மறவாமை’, ‘உன்னடியின் கீழ் பாடிக்கொண்டிருக்க’ என்று வரம் கேட்டுப் பெற்றார். இறைவன் வழிகாட்டியபடி திருவாலங்காடு சேர்ந்து இரத்தின சபையிலே ஐயன் திருநடனம் தரிசித்தபடி பதிகங்கள் பாடி சிவானந்த அநுபவத்தோடு எக்காலமும் இருக்கின்றார்.

## இப்ப நாம் எங்கே இருக்கோம்!

அந்த இளைஞர்கள் இருவருக்கும் வேட்டை ஆடுவதில் அதிக விருப்பம். எனவே அவர்கள் அடிக்கடி காட்டுக்குச் செல்வது வழக்கம். ஒரு நாள் சிறிய விமானம் ஒன்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டு காட்டுக்குச் சென்றனர். வேட்டையில் இரண்டு காட்டு எருமைகள் கிடைத்தன. அவற்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். விமான ஓட்டுனர் சொன்னார். ‘ஐயா இரண்டு எருமைகளது எடையையும் இந்த சிறிய விமானம் தாங்காது. வேண்டுமானால் ஒன்றை ஏற்றிக்கொள்ளலாம்’ என்றார். உடனே இளைஞர்கள், ‘கடந்தவாரமும் இதேபோல் இரண்டு எருமைகள் எங்களுக்குக் கிடைத்தன. அப்போது விமான ஓட்டுநர் இரண்டையும் ஏற்றிக்கொள்ள சம்மதித்தாரே’ என்றனர். ‘ஓ ...... அப்படியென்றால் சரி இப்போதும் இரண்டு எருமைகளையும் ஏற்றலாம்’ என்றார் ஓட்டுநர்.

இளைஞர்கள் எருமைகளை விமானத்தில் ஏற்றினர். புறப்பட்ட சில நிமிடங்களிலே பாரம்தாங்காமல் தடுமாறிய விமானம் வயல் வெளியில் விழுந்தது. உள்ளே இருந்து வேட்டைக்கார இளைஞர்கள் இருவரும் மெள்ள வெளியேவந்தனர். ஒருவன் கேட்டான், ‘இப்பநாம எந்த இடத்திலே விழுந்திக்கோம்?’ அடுத்தவன் பதில் சொன்னான், ‘போனவாரம் விழுந்தோமே............... அதற்குப் பக்கத்து வயலில் தான்.!’
இந்த வேடிக்கைக் கதை விளக்குகின்ற உண்மை என்ன?
அநுபவங்கள் நமக்குப் பாடமாக வேண்டும் இல்லையெனில் இப்படித்தான் அடிக்கடி விழவேண்டியிருக்கும்.

-தென்கச்சி சுவாமிநாதன், நன்றி சக்தி

Commercial & Industrial Guarding
Call now for a free survey and quotation

SECURITY GUARD WANTED

- Retail
- Construction
- 24 Hour Radio Patrols
- Key Holding
- Access Control
- CCTV

# CHARTER SECURITY

A Professional Service Every Time

1st Floor
Cambridge Road
Barking
Essex
IG11 8NR

Tel: 020 8507 7717
Fax: 020 8507 7702

# உயர்ந்தோர் (கந்தபுராணச் சிந்தனைகள்)

சிந்திப்பவர் Dr சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

# செய்கை

'உலகு என்பது உயர்ந்தோர் மாட்டு' என்று சங்க இலக்கியங்கள் சொல்லும். இந்த உயர்ந்தோர் செய்கை என்ன? அவர்களுடைய எந்த வகையான செய்கையாலே உலகம் எவ்வாறு புத்துயிரும் புதுவடிவும் கொள்கிறது எனச் சிந்திப்போம். பெரிய வல்லரசுகளின் தலைவர்கள் எடுக்கின்ற முடிவுகளாலே, சிந்தனைகளினாலே, உலக சமாதானம், பொருளாதார மேன்மை, வளர்ச்சி என்பன வடிவுகொள்கின்றன. நாடுகளின் தலைவர்களின் முடிவுகளினாலே நாட்டின் வளர்ச்சி, மேன்மை, மக்களின் சுகபோக வாழ்வு என்பன வடிவு கொள்கின்றன. குடும்பங்களிலே அவற்றின் தலைவர்களாலே, அது ஆணானாலும் சரி பெண்ணானாலும் சரி,அவர்களின் சிந்தனையினாலே, செய்கையினாலே, குடும்பங்கள் மேல்நிலையை அடைகின்றன. தனியொருவனின் உதவியாலே இன்னொருவன் மேல் நிலையடைகின்றான். இவ்வாறு பார்க்கும் போது உண்மையில் உலகு என்பது உயர்ந்தோர் மாட்டே என்பதும், அவ்வாறான உயர்ந்தோர் பலநிலைகளில் இருப்பதும், நம்மில் பலரும், ஏன் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் உயர்ந்தோரே என்பதும் புலப்படும். கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரத்திலே இந்த உயர்ந்தோர் செய்கைக்கு உதாரணச் சம்பவங்கள் பல வருகின்றன. இவற்றுள் மூன்றைப் பார்ப்போம்.

**முதற் சம்பவம்**

முன்னொருகாலத்திலே இவ்வுலகிலே இருந்த உயிர்களெல்லாம் செய்த வினைப் பயனால் மறைகளெல்லாம் செயலிழந்து அவற்றைப்பற்றிச் சொல்வதற்கே எவருமற்ற நிலையொன்று உருவாகியது. அத்தகைய காலத்திலே தேவர்களும் முனிவர்களும் பூலோகத்தில் வாழும் மனிதர்களும், உள்ளத்தில் தெய்விக ஞானம் இல்லாதவராய், வேதநெறியினின்றும் விலகி, பல தீய நெறிகளை உண்டாக்கினர், அவற்றிற்காக நூல்களையும் உண்டாக்கினர். இதனை இரண்டு உயர்ந்தோர் - பிரம்மாவும், விஷ்ணுவும் காண்கின்றனர். அவர்களுடைய சிந்தனையின் தெளிவாக இந்தக் குழப்பமான நிலை சிவனருளாலன்றித் தீராது எனத் துணிந்தனர். அதன் பிறகு அவ்விருவரும் இந்திரலோகத்தை ஆளுகின்ற இந்திரனையும், மற்றத் தேவர்களையும் அழைத்துக்கொண்டு கைலைமலையில் சிவபெருமானைக் காணச் சென்றனர். கைலையை அடைந்த அவர்கள் நந்தி தேவர் மூலம் இறைவனின் அநுமதி பெற்று அவர் முன் சென்று வழிபாடு இயற்றினர். அவர்களைப் பார்த்த சிவபெருமான் 'உங்கள் தொழில்கள் நன்றாக நடைபெறுகின்றனவா?' என்று கேட்டார். அதற்குத் திருமால், உங்களுடைய கிருபையால் தொழில்கள் எல்லாம் நன்றாகவே நடக்கின்றன எனத் தொடங்கி, உலக ஜீவராசிகள் எல்லாம் நெறிமாறிப் போனதை விரிவாக எடுத்துரைக்கின்றார். இறுதியாக ஒரு வேண்டுகோளையும் விடுக்கிறார்.

'இறைவா! எங்கள் வேண்டுகோளை ஏற்று, மக்கள் மெய்ஞ்ஞானம் பெற்று அஞ்ஞானம் அகன்று, மனத்தில் சந்தேகம் நீங்கித்

தங்கள் திருவடியையே அடையுமாறு அருள்புரிய வேண்டும்' என்பதே அந்த வேண்டுகோள்.

அங்கவர் போதமுற் றாசொ ரீஇமனச்
சங்கையு மகன்றுநின் சரண மேயுறப்
புங்கவ சிறிதருள் புரிய வேண்டுமால்
எங்கடம் பொருட்டென இறைவன் கூறுவான்.
பாயிரப் படலம் 30

உலகத்திலுள்ள ஜீவராசிகள் உய்ந்தேறும் வகை தேடிச் சென்ற திருமாலினதும், மற்றைய தேவர்களினதும் உயர்ந்த செய்கை இது. இதனைக் கண்ணுற்ற சிவபெருமான், 'மாசற்ற திருமாலே! நீ உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் காப்பவன். அதனால் அந்த உயிர்களின் தீவினை நீங்கும்படி வேண்டிக்கொண்டாய். அதற்கு ஒரு சிறந்த வழியை நாம் கூறுவோம். அதனால் உன் மனத்திலே தோன்றிய கவலையை நீக்கு' என்று சொல்கிறார்.

இனிதொரு திறமதற் கிசைத்து மாருயிர்
அனையவும் புரப்பவ னாத லாலவர்
வினையறு நெறிமையால் வேண்டு கிற்றிநின்
மனனுறு மெண்ணினை மறுத்தி மாசிலாய்.
பாயிரப் படலம் 31

இவ்வாறு திருமாலின் செய்கையை மெச்சிய சிவபெருமான், அவரை வியாசர் என்ற பெயரில் பூமியில் தோன்றும்படியும், மறைகளெல்லாவற்றையும் தக்கோர்க்குச் சொல்லிக்கொடுக்கும்படியும், தம்மால் முன்னர் நந்திக்கு அருளப்பட்ட மறைகளுக்குச் சமானமான புராணங்களைக் கற்பிக்கும்படியும் பணிக்கின்றார். அவருடைய வார்த்தைகளை நன்றெனக் கேட்ட திருமால் தேவர்கூட்டத்தோடு பூமியிலே அவதரித்தார். பூலோக வாசிகளான நாம் உய்வடைய, நமக்கு மறைகளும், புராணங்களும் கிடைத்தன. இதிலே நாம் கவனிக்க வேண்டியதென்னவென்றால், 'உலக நன்மையே இவ்வுயர்ந்தோரின் சிந்தனையாக இருந்தது. அதற்காக அவர்கள், தம்மை மட்டுமல்ல தம்மைச் சேர்ந்தவர்களையும் கஷ்டத்திலாழ்த்தி, வசதியான வாழ்வை விட்டு மண்ணுலகம் வந்து உலகுக்கு நன்மை செய்தார்கள்' என்பதே.

**இரண்டாவது சம்பவம்**

அசுரகுலம் சிறுமையடைகிறது. பிரம்ம விஷ்ணு தேவர்களாலே பல அசுரர்கள் அழிந்துபட்டனர். அவுணர்க்கரசனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் மாயையில் நல்ல தேர்ச்சியுடையவளாக விளங்கினாள். அவளுக்கு மாயை என்ற பெயரும் உண்டாயிற்று. இந்த நிலையில் அசுரர் குலகுருவாகிய சுக்கிராச்சாரியர் சிந்திக்கிறார். அவருடைய மனத்திலே திட்டமொன்று உருவாகின்றது. மாயை மூலம் அசுரர்குலம் மேன்மையடைய ஒரு திட்டம் தீட்டுகிறார். அவர் மாயையை அழைத்துப் பின்வருமாறு சொல்கிறார். 'மின்னலினால் தாழை மலர்கள் மலர்வது போல் என்னால் (சுக்கிராச்சாரியாரால்) மழை பொழிவது போல், தேடிய பொருளின் காரணமாக எல்லாம் கிடைப்பதுபோல்,உன் காரணமாக அசுரர்களுக்குப் பெருமையுண்டாகும். இலக்குமி தேவியும் உன்காலடியில் வணங்குமாறும், சிறந்த புலவராலும் வர்ணிக்க முடியாததும் ஆன ஒரு பேரழகி வடிவத்தை எடுத்துக்கொண்டு நீ காசிப முனிவரிடம் செல், அவர் மீது உன் வல்லமையைக் காட்டி, ஆசையூட்டி அவருடன் இரவிலே சேருவாயாக. அவ்வாறு சேர்ந்து, அசுரர்களைப் பெற்று, அவர்களுக்குப் பெயர்களும் வைத்து, அவர்கள் அளவற்ற செல்வங்களை அடைவதற்கு ஏற்ற வேள்விகளையும், நோன்புகளையும் கற்றுக்கொடு, அதன் பிறகு அவர்களைக் கடுந்தவத்தில் நெறிப்படுத்திவிட்டு, அன்னையாகிய நீ திரும்பி வா'.

இவ்வாறு அசுரகுலத்தின் மேன்மையையே

கருத்திற் கொண்ட உயர்ந்தவராகிய சுக்கிராச்சாரியார் சொல்லக்கேட்ட மாயை சிந்திக்கிறாள். சிந்தித்த மாயை, 'இதிலே அசுர குலத்தின் மேன்மை தங்கியிருக் கிறது. ஆனபடியால் அதைச் செய்வதே தகுதியானது, உயர்ந்தது, இதனை யான் செய்வேன்' என முடிவெடுத்தாள். இவ்வாறு தீர்மானித்த மாயை சுக்கிராச்சாரியாரைப் பார்த்து, 'குற்றம் இல்லாத சிறப்புடைய அசுரர் குலம் இப்போது அடைந்த தாழ்மை நீங்கிச் சிறப்புறும்படி, இவற்றையெல்லாம் எனக்கு அருள் செய்தீர். ஆதலால் தாங்கள் இட்டபணியை இப்போதே செய்வேன்' என்று சொன்னாள்.

குரவன் வாய்மையை வினவியே கோதில் சீர்
-அவுணர்
மரபு மேம்படு தன்மையான் மற்றிவை யெல்லாம்
அருளு கின்றனை ஆதலால் இப்பணி யடியேன்
புரிகு வேனென அவனடி வணங்கியே போனாள்.
மாயைப் படலம் 11

இங்கே இரண்டு உயர்ந்தோரின், சுக்கிராச் சாரியாரினதும், மாயையினதும் சிந்தனை களைப் பார்கின்றோம். சுக்கிராச்சாரியார் அசுரகுல மேம்பாட்டுக்காகச் சிந்திக்கிறார், செயற்படுகிறார். மாயை அசுரகுல மேம் பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணிக்கிறாள். பின்னர், சூரனின் பெருவாழ்வின் போது மாயை அதனை எவ்வாறும் அநுபவிக்காது ஒதுங்கியே வாழ்ந்தாள்.

மாயை, சுக்கிராச்சாரியார் கூறியபடி காசிப முனிவருடன் கூடியதும், பிள்ளைகள் பெற்றதும், அவர்கள் சிவபெருமானை நோக்கிப் பெருவேள்விகள் செய்து பெரிய நிலை அடைந்ததும், அசுரகுலம் பெரு வாழ்வு பெற்றதும் இதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகள் ஆகும்.

**மூன்றாம் சம்பவம்**

முருகப் பெருமான் திருவவதாரம் செய்து சில காலத்தின் பின், ஒரு நாள் பிரம்மதேவர் சிவனைத் தரிசிக்க வருகிறார். தரிசனையின் பின், அவருடைய அகந்தையினால் அங்கிருந்த முருகப் பெருமானைக் கவனம் செய்யாமல் போகிறார். அதன் பின் முருகப் பெருமான் அவரை அழைத்து, அவர் செய்யும் தொழில் யாது என வினவிய பின், 'ஓம்'என்னும் பிரணவப் பொருளின் விளக்கம் யாதெனக் கேட்கின்றார். விளக்கம் கொடுக்க முடியாத பிரம்மா சிறையிலிடப்படுகிறார். முருகப் பெருமான் படைத்தற் தொழிலை மேற்கொள்கிறார். இதனைத் திருமால் ஞான திருஷ்டியில் காண்கின்றார்.

நஞ்சை உண்டமையால் கறுத்த கண்டத்தையுடைய சிவபெருமானின் திருக்குமாரராகிய முருகப் பெருமான், இவ்வாறு படைத்தற் தொழிலைச் செய்து கொண்டு இருக்க, பிரம்மாவின் சிறையை நீக்குவதற்குரிய வழிவகையைச் சிந்தித்த திருமால், ஒழுக்கம் மிகுந்த தேவர்களும் முனிவர்களும் தன்முன்னே வரும்படி நினைத்தார்.

ஆல மாமிடற் றண்ணல்சேய் இத்திறம்
-அளப்பில்
காலம் யாவையும் அளித்தனன் இருத்தலும்
-கரியோன்
நாலு மாமுகன் உவளகம் நீக்குவான் நாடிச்
சீல வானவர் முனிவரைச் சிந்தனை செய்தான்
-அயனைச் சிறைநீக்கு படலம்

திருமால் தன்முன்னே வந்த தேவர்களும் முனிவர்களும் புடைசூழ்ந்துவரச் சென்று சிவனை வணங்கி, அவர்மூலம் பிரம்மாவைச் சிறையினின்றும் மீட்கின்றார். இந்த வகையிலே உயர்ந்தோர் செய்கை உலகம் உய்ய, தன்னைச் சார்ந்தோர் உய்ய, குலம் உய்ய, தனி ஒருவன் உய்ய என்ற வகையில் பிரிந்திருப்பதை நாம் காணலாம். அத்தோடு

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்ற வள்ளுவனின் வாக்குக்கமைய, அவர்கள் செயல்கள் இருப்பதையும் காணலாம். அது மாத்திரமன்றி, நல்ல செய்கைக்காக அவர்கள் மற்றும் பெரியோர்களைத் துணை கொள்வதையும், இவ்வாறு ஒன்றுபட்ட அவர்கள் ஒரு மனதாகத் தொழிற்படுவதையும் காணலாம். இதனாலே சைவக் கலாசார அடிப்படையிலே உயர்ந்தோராக வர விரும்புவோர், எவ்வாறு தம் சிந்தனைகளைப் பரந்துபட்டதாக வளர்க்க வேண்டும் என்பதையும், பெரியோரைத் துணைக்கொள்ள வேண்டும் என்பதனையும், எவ்வாறு சக பெரியோர்களோடு ஒருமனதாகத் தொழிற்பட வேண்டும் என்பதையும் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது.

(சிந்தனை தொடரும்.......)

## அட்சய திருதியை அன்று தங்கம் வாங்கவேண்டுமா?

அட்சய திருதியைக்கும் தங்கம் வாங்குவதற்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை. அடிப்படையில்லாத ஒரு நம்பிக்கை மக்களிடம் நிலைத்து விட்டது.

அட்சய திருதியையில் முன்னோர்களை ஆராதிக்கலாம். அன்று வசந்தமாதவனை பூஜிப்பதும், வைசாக ஸ்நானமும் சிறப்பு. ஆறு முதலிய நீர்நிலைகளில் நீராடலாம். அன்னதானமளிக்கலாம். தயிர்ச்சாதம், குளிர்ந்த பானங்கள், குடை, விசிறி முதலியவற்றைக் கொடையாக வழங்கவேண்டும். வசதியுள்ளவர்கள் தங்கத்தைக் கொடையாக வழங்கலாம். அன்றைய தினம் மாதவனை அதாவது விஷ்ணுவை வழிபட்டால் பிறவிப்பயன் கிடைத்து விடும். அட்சய திருதியையில் அளிக்கும் கொடை அட்சயமாக(அழியாமல்) இருக்கும்.

தங்கம் வாங்குவதற்கும், அது உருக்குவதற்கும் நல்ல நாள்கள் பார்த்துச் செய்ய வேண்டும். அட்சய திருதியையில் தங்கம் வாங்குவது தனிச்சிறப்பென்று சாஸ்திரம் சொல்லாது. நம்பிக்கை வேறு, சாஸ்திரம் வேறு ஆகவே தங்களது விருப்பப்படி செயல்படலாம் தவறேதும் நிகழாது.

சேஷாஸ்திரிநாத சாஸ்திரிகள் நன்றி சக்தி

ஞானி: பிழை விடுதல் மனித இயற்கை. மனிதன் தன் தவறை உணர்ந்தால் கடவுள் அவனை மன்னிப்பார். அவன் அத்தவறைத் திரும்பச் செய்யக்கூடாது.

விஞ்ஞானி: கடவுள் தவறு செய்தவரை மன்னிப்பார். ஆனால் கடவுளிடம் மன்னிப்பு பெறுவதற்கு முதலிலே நாம் தவறு செய்யவேண்டும்.

# காயத்திரி மந்திரம்

இராம. தேவேந்திரன்

கம்பீரமான ஈர்ப்புச் சக்தி உடையது காயத்திரி மந்திரம். மந்திரவசம் உடையவர்கள் ஓதுவதே அதற்குச் சிறப்பு. நமது சைவத்தின் சிறப்பு யாதெனில் யார் எதைச் செய்தாலும் அதற்குச் சமயத் தலைவர்கள் சர்ச்சை செய்வதில்லை. ஆதியும் அந்தமும் இல்லாத எமது சமயம் எவருடைய தயவையும் நாடவேண்டிய தேவை இல்லை. எமது சமயத்தைக் கேலிசெய்து கட்டுரைகள் சில பத்திரிகைகளிலும் எழுதப்படுகின்றன. அது எழுதுபவர்களின் அறியாமையும் பிரசுரிப்பவர்களின் பேதமையுமே ஆகும். ஆனால், சமயத்திலே பற்றுள்ள சில அன்பர்களும் சிலவேளைகளில் தாம் செய்வது தவறானது என்று தெரியாமலே செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு உதாரணம் 'காயத்திரி மந்திரம்' ஆகும். இந்த மந்திரத்தின் மகிமை, தாற்பரியம், சக்தி, தூய்மை, ஓதும் முறை ஆகியவற்றை தெரியாமல் யார் வேண்டுமானாலும் எப்படியும் ஓதலாம் என நினைத்துச் செயற்படுவது மாபெரும் தவறு. மந்திரம் என்பதே மறைபொருள். அதை ஒழுக்கநெறி உடைய குலத்தில் வந்தவர்கள் பாரம்பரிய நெறிமுறைகளோடு ஒழுகிநின்றே ஓதவேண்டும். இரண்டாம் பிறப்பு எனப்படுகின்ற 'பிரம்மோபதேசம்' (பூணூல்போடும் நாள்) செய்கின்ற நாளிலே முதலிலே சொல்லப்படுகின்ற வேதமந்திரம் இந்தக் காயத்திரி மந்திரம். இதைத் தம்வசப்படுத்தி ஜபம் செய்து சித்தி பெறுபவர்கள் சிவாசாரியர்கள். புனிதமான இந்த மந்திரத்தை சமயதீட்சை பெறாது, புலால் உணவுகள் தவிர்க்காது வாழும் நிலையுடையோரால் சொல்லப் படுவது மாபெரும் பாவமாகும். அதுமட்டு மன்றி இடம், பொருள், ஏவல் என்கின்ற நிலை மறந்து இசை நிகழ்ச்சிகளில், அரங்கங்களில் இம்மந்திரத்தை இசை யோடு பாடுவதும் வாத்தியங்களிலே சங்கீதமாக வாசிப்பதும் வேதனைக்குரிய விடயமாகும். அந்த மந்திரத்தின் புனிதத் தன்மையை நாமே மாசுபடுத்துவதாக இது அமையும். காலங்காலமாக நாம் போற்றி வருகின்ற எமது சமயத்தின் விழுமியங் களின் முக்கிய நிலை வேதங்களில் மட்டுமே உண்டு. அந்த வேதங்களின் சாரமே எமது திருமுறைகள். வேத ஒலி ஈர்ப்புக்கும் திருமுறை பாராயணத்துக்கும் நிறைய வேறுபாடு உண்டு. திருமுறை களை நாம் அவற்றிற்குரிய ஆசாரத்தோடு, முறையோடு ஓதவேண்டும்: ஓதலாம். அதுபோல மந்திரத்தை அதற்குரிய சிவா சாரியர்களிடமே விட்டுவிடுவது நல்லது.

தெரிந்துணரின் முப்போதுஞ் செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய**அர்ச் சனைகள்சிவ வேதியர்க்கே உரியன**அப்
பெருந்தகையர் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ?

-பெரியபுராணம்



## ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை
## SHRI KANAGATHURKKI AMMAN (HINDU) TEMPLE TRUST

5, Chapel Road, West Ealing, London, W13 9AE, UK. (+44) 208 810 0835, (+44) 208 840 0485

SPONSOR A CHILD



£15 Per Month

**கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது**

# காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும் இல்லங்களின் விபரம்

1 இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இல்லம் - பதுளை
2 இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இல்லம் - மன்னார்
3 இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இல்லம் - திருப்பழுகாமம்
4 திலகவதியார் இல்லம் - மட்டக்களப்பு
5 திலகவதியார் இல்லம் - செட்டிப்பாளையம்
6 அன்பு இல்லம் - திருகோணமலை
7 விபுலானந்தர் இல்லம் - மட்டக்களப்பு
8 அம்மன் மகளீர் இல்லம் - அம்பாறை
9 இனிய வாழ்வில்லம் - புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
10 சிவானநந்த தபோவனம் - திருகோணமலை
11 சைவ வித்தியா விருத்திச் சங்கம் - யாழ்ப்பாணம்
12 அன்பகம் - வவுனியா
13 ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இல்லம் - வவுனியா
14 ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் - வவுனியா

மேற்குறிப்பிட்ட இல்லங்களில் உங்களின் பேருதவியினால் **350 பிள்ளைகள்** பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள் இன்னும் ஏராளமான வேண்டுதல்கள் இல்லங்களில் இருந்து வந்த வண்ணம் உள்ளன. அம்பிகை அடியார்களாகிய நீங்கள் முன்வந்து இன்னும் இப்பணிக்கு உதவ வேண்டுமென வினயமாக வேண்டி நிற்கின்றோம். கடந்த ஓராண்டில் (சித்திரை 2007 – பங்குனி 2008) **"காக்கும் கரங்கள்"** திட்டத்திற்கு **£60000** பவுண்களும் தையல் பயிற்சி நிலையங்கள், மற்றும் கணினிப் பயிற்சி நிலையங்கள் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்கு **£40000** பவுண்களும் அனுப்பப்பட்டு உள்ளன.









**ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்!**
**அவர்களுக்கு வாழ வழி காட்டுவோம்!**
**அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம்.**
**அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.**
**அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்.**



# ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள் ஆலய தேர் உற்சவம்

இந்த இதழின் அட்டைப்படத்தை ஈலிங் பதியிலே இருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீகனகதுர்க்கை அம்பாளின் தேர்ப்பவனி அலங்கரிக்கிறது. கோயில்களிலே நடக்கும் உற்சவங்கள் பலவகைப்படும். ஒரு நாள் மட்டும் நடைபெறும் உற்சவம், வாரந்தோறும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் நடைபெறும் உற்சவம், மாதந்தோறும் நடைபெறும் உற்சவம், மகோற்சவம் எனப் பலதரப்பட்ட உற்சவங்கள் உண்டு.

இவற்றிலே மகோற்சவம் மகத்தானது. கோயிலிலே கொடி ஏற்றி பத்து நாள்கள் வரை திருவிழா நடைபெறும். உற்சவ மூர்த்தியைப் பல்வேறு முறையில் மலர்களால் அலங்காரம் செய்து விதவிதமான வாகனங்களிலே எழுந்தருளப்பண்ணி வீதியுலா வருவது வழக்கம். ஒன்பதாம் நாள் தேர்ப்பவனியும் பத்தாம் நாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். தேர் உற்சவத்தைப் பார்த்துத் தரிசித்தால் ஒரு வருடம் கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனம் பண்ணிய பலன் உண்டு என்று சொல்வார்கள்.

மகோற்சவத்தின் தத்துவம் என்ன? இறைவன் ஆன்மாக்களைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளுகின்றான். இந்த ஐந்தொழில்களை விளக்கும் தத்துவமே உற்சவத்தின் தத்துவம் என்று அறிஞர் கூறுவர். இதன்படி தேர் உற்சவம் அழித்தற் தொழிலைக் குறிப்பது. உயிர்கள் அழிவதில்லை. பஞ்ச பூதத்தாலான உடல்களே அழியும். இங்கே அழித்தல் என்பது ஆன்மாக்களின் மலத்தை அழிப்பதையே குறிப்பிடப்படுகின்றது. இந்தக் காலத்திலே தேரைப் பூக்களால் அலங்கரிக்கிறார்கள். தேரிலே மனிதர்கள், மிருகங்கள், தாவரங்கள் என்று பலவித சீவராசிகளின் வடிவங்கள் அமைந்திருக்கும். இது தவிர, வாழை, காய்கறி, மலர்கள் என்றும் கட்டி அழகு செய்வார்கள். இறைவன் இயற்கையுடன் சம்பந்தமுள்ளவன், எல்லா உயிர்களையும் காப்பவன் என்பதை இது அறிவுறுத்துகின்றது.

ஈலிங் பதியில் இருந்து பத்தர்களுக்கு அருள்பாலித்துக்கொண்டு இருக்கும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் பத்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தேரேறி ஊர்வலம் வருகின்றார். இந்த அழகான காட்சியை நாம் அனைவரும் கண்டு தரிசித்து ஆனந்தம் அடைவதோடு அன்னையின் அருளைப் பெற்றுய்வோம்.

# மனிதவாழ்வில் ஜோதிடம் மாபெரும் பொக்கிஷம்

துன்னையூர் கலாநிதி ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்

முந்தைய கலசம் இதழ்களில் ஜோதிடம் பற்றிய கட்டுரைகளை துன்னையூர் கலாநிதி இராம். தேவலோகேஸ்வரக்குருக்கள் எழுதி வந்தர்கள். இடையிலே தவிர்க்கமுடியாத காரணங்களால் இத்தொடர் நின்றுவிட்டது. மீண்டும் இத்தொடரை ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

-ஆசிரியர்

கடந்த கலசம் இதழ்களிலே நட்சத்திரங்களின் பலன்களைப்பற்றி அறிந்தோம். பொதுவாக நட்சத்திரம், இராசி என்பன எமது பொதுப் பலன்களைப் பார்த்து தெரிந்து கொள்வதற்கு மிகவும் வசதியாக அமைகின்றன. பத்திரிகைகளிலும் தொலைக் காட்சி, வானொலிகளிலும் கூறப்படுகின்ற பலன்கள் இராசி, நட்சத்திர அடிப்படையிலே அமைவனவாகும். இவை 50வீதம் சரியானதாக இருக்கும். ஒருவரின் ஜாதகத்தை நன்கு ஆராய்ந்து பார்க்கும் போதுதான் 100வீதம் சரியான பலனை எதிர்பார்க்க முடியும். அதிலும் பிறந்த திகதி, நேரங்களிலே தவறுகள், சரியான நேரக்கணக்கு அற்று இருந்தால் பலன்களில் மாற்றம் இருக்கும். எனவே பிறந்த நாளின் திகதி, சரியான நேரம் என்பவற்றிலே கவனம் செலுத்தி ஜாதகம் எழுதவேண்டும். அப்போதுதான் பலன்களும் சரியாக அமையும் நிலையுண்டு.

இதன் அடிப்படையிலே இனி வருகின்ற இதழ்களிலே ஜன்ம லக்னம் பற்றிய பலன்களைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். லக்னம் என்றால் என்ன? இதை எப்படித் தெரிந்துகொள்வது என்கின்ற கேள்வி உங்கள் மனத்திலே எழும். ஜனன ஜாதகத்திலே பிறக்கின்ற நேரநிலையைக் கொண்டு கணிக்கப்படுவது ஜன்ம லக்கினம். இந்த லக்னத்தை வைத்தே ஜாதக நிலையின் முழுப்பலனும் நிர்ணயம் செய்யப்படுகிறது. உங்களுடைய ஜாதக கிரஹகட்டத்தில் 'லக்னம்' எனக் குறிபிடப் பட்டிருக்கும் இடந்தான் ஜன்மலக்னம். பன்னிரண்டு இராசிகளில் எந்த இராசியில் அமைந்திருக்கிறதோ அதுவே உங்களின் ஜன்மலக்னம். இதுவே முதல் பாவமாக அமைகின்றது. இதில் இருந்தே பன்னிரண்டு பாவங்களும் அமைகின்றன. எனவே ஜன்மலக்னம் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. இந்த லக்னங்களில் கிரஹங்கள் அமைகின்ற நிலைகளை அறிந்தே விரிவான பலனைக் கூறமுடியும். அதேசமயம் லக்ன அதிபதியை அறிந்து பொதுவான குண இயல்பும் அதிர்ஷ்ட நிலைகளும் பற்றிய பலன்களை லக்னம் மூலமாக அறியலாம். இனி ஒவ்வொரு ஜன்மலக்ன பலன்களை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

## மேடலக்னம்

ஜாதக கிரஹ நிலையிலே மேடலக்னம் உடையவர்களின் பலன்கள் பற்றிப்




பார்ப்போம். மேடம் அல்லது 'மேஷம்' என்னும் லக்னம் லக்னங்களிலே முதலாவ தாக அமையும். இந்த லக்னத்துக்குரிய அதிபதி செவ்வாய் என்னும் 'அங்காரகன்' ஆகும். மேட லக்னத்திலே ஜனித்தவர்கள் நல்ல ஆளுமைத்திறன் உடையவர்கள். பொதுவாக இவர்களின் பிற்கால வாழ்க்கை யோகநிலை பெறும். சிறுவய துக்காலம் வறுமைநிலை சூழப்பெற்றி ருக்கும். இந்த லக்னத்தின் குடும்ப, களத்திர ஸ்தான அதிபதியாக சுக்கிரன் அமையப்பெறுகின்றார். எனவே குடும்ப வாழ்க்கை சிறப்பானதாக அமையும் நிலையுண்டு. பூமிகாரகன் என்று போற்றப் படும் செவ்வாய் லக்ன அதிபதியாக அமையப்பெறுவது இந்த லக்னம் அமைந்த அன்பர்களுக்கு சொத்துக்கள் சேரக்கூடிய பலன்களை உண்டாக்கும். இந்த லக்னம் அமையப்பெற்றவர்களுக்கு லக்னத்தில் சூரியனும் 4ஆம் இடத்தில் குருவும் 9ஆம் இடத்தில் புதனும் 11ஆம் இடத்தில் சனியும் அமையப்பெறின் நாடாளும் சக்கரவர்த்தி யோகம் பெறு வார்கள். பொதுவாக இந்த லக்னத்துக்கு சகோதரத்தான அதிபதி புதன் ஜயரோ கஸ்தான ஆதிபத்தியம் பெற்று அமைவது சகோதரர்களால் பெரு நன்மைகள் ஏற்பட வாய்புக்கள் இல்லை. கிரஹ நிலையில் புதன் பஞ்சம, பாக்கிய ஸ்தான நிலைக ளில் அமையப்பெறின் ஓரளவுக்கு அநுகூலமான பலன்களைக் கொடுக்கும். மேலும் இந்த லக்னக்காரர்களுக்கு ஜீவனஸ்தான ஆதிபத்தியம் பெறும் சனிபகவானே லாபஸ்தான நிலையும் பெறுவது தொழில் நிலை, வருமான நிலைகளை சிறப்பாக அமைக்கும். எந்த விடயமானாலும் அதிலே முதன்மை யானவர்களாக இருக்கவேண்டும் என்கின்ற எண்ணமும் அந்த எண்ணதுக்கேற்ப முயற்சியும் உடையவர்கள் இவர்கள். அதேபோல் இந்த லக்னத்தார்க்கு செவ்வாய் தோஷம் பெருமளவு தோஷ நிலையைக் கொடுக்காது. இந்த லக்னத் தார்க்கு சூரியன், குரு இரு கிரஹங்களும் யோகநிலை தரக்கூடிய வர்கள். இவ்விரு கிரஹங்களின் மஹா தெசை, புத்தி ஆகிய வற்றில் சிறப்பான பலன்கள் அமையும். பொதுவாக எந்த விடயமானாலும் இவர் கள் போராடியே ஜெயிக்க வேண்டிய நிலை உண்டு. இருப்பினும் நினைத்த தைச் சாதிக்கின்ற ஆற்றல் இந்த லக்னத் தார்க்கு உண்டு. ஜன்மலக்னம் சுபகிர ஹங்கள் பார்வை யானால் தொண்ணூறு வயதுவரை சீவித்திருப்பார்கள். எல்லோ ரையும் அநு சரித்துச் செயற்படுகின்ற குண இயல்பும் வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும் என்ற வேகமும் நியாயபூர் வமான செயற் பாடும் இவர்களிடம் அதிகமாக அமைந்தி ருக்கும். இந்த லக்னம் உடை யவர்களின் வாழ்க்கை மிகவும் பிரகாசமானதாக அமையும்.

இடப லக்கனம் பற்றிய விவரம் அடுத்த இதழில்........

# அருட் கூத்தன்

## சிவதாண்டவங்கள்

பாண்டரங்க நடனம்- முப்புரம் எரிக்க எழுந்தருளியபோது கலைமகளைத் தேற்றுவதற்கு ஆடியது
கொடுகொட்டி நடனம்- திரிபுரத்தை எரித்த பிறகு. தேவி தாளமிட. தம் கரங்களைக் கொட்டி ஆடியது
சந்தியா நிருத்தம்- ஆலகாலவிடம் உட்கொண்டபின். திரயோதசியன்று டமருகம். சூலம் ஏந்தி ஆடியது
சண்டதாண்டவம்- திருவாலங்காட்டில் காளியின் ஆணவத்தை அடக்க. பைரவ முகூர்த்தமாக ஆடியது
கௌரி தாண்டவம்- கௌரிக்கு கயிலாயத்தில் ஆடிக் காட்டியது
வீரட்டகாச நடனம்- முருகன் பிரணவப் பொருளை உணர்த்தியபோது வீரங்கொண்டு ஆடியது ஆனந்த தாண்டவம்- பதஞ்சலி, வியாக்ரபாதர், சிவகாமி முன்னிலையில் சிதம்பரத்தில் ஆடியது
அனவரத நடனம்- ஆன்மாக்களுக்கு போக முத்திகளை அளிக்கும் பொருட்டு எப்போதும் ஆடும் நடனம்
மகாசங்கார நடனம்-மகாப்பிரளயத்தில் ஆன்மாக்கள் பராசக்தியில் ஒடுங்க, பராசக்தி சிவத்தில் ஒடுங்க ஒருவனே தானாக இருந்து ஆடிய நடனம்

( நன்றி ஜீ.ச.முரளி )

இவைகளைத்தவிர அஜபா நடனம். சதுர தாண்டவம் ஆகியவையும் பேசப்படுகின்றன.

மௌலௌ கங்கா சசாங்கே கர சரண தலே சீதலாங்கா புஜங்கா
வாமே பாகே தயார்த்ரா ஹிமகிரி துஹிதா சந்தனம் சர்வ காத்ரே
இத்தம் சீதம் ப்ரபூதம் தவ கனக சபாநாத சோடும் க்வ சக்தி
சித்தே நிர்வேதப்தே யதி பவதி ந தே நித்யவாசோ மதீயே

சடையில் குளிர்ந்த கங்கையையும் சந்திரனையும் தரித்துள்ளாய். கை கால்களில் குளிர்ந்த உடலையுடைய பாம்புகள் உள்ளன. உன் துணைவியோ பனி நிறைந்த இமவானின் புதல்வி. மார்கழி மாதத்தில் குளிர் நீரால் உன்னை நீராட்டுகிறார்கள். மேலும் உன் உடல் முழுதும் குளிர்ந்த சந்தனத்தை அப்புகிறார்கள். இத்தகைய குளிர்ப் பொருள்களைத் தாங்கும் திறன் எப்படி வந்தது. எனக்குத் தெரியும். நீ உயிர்களின் உள்ளங்களிலே குடி கொண்டுள்ளாய். அந்த உள்ளங்கள் காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியங்களாற் கனன்று எரிகின்றன. அவ்வெப்பத்தைப் போக்கவே மேற்கண்ட குளிரான பொருள்கள் உனக்குத் தேவைப் படுகின்றன.

அனந்த நவரத்ன விலசத் கடக கிங்கிணி ஜலஜ்ஜல ஜலஞ்ஜரம்
முகந்த விதி இஸ்த கத மத்தல லயத்வனி திமித்திமித நர்த்தன பதம்
சகுந்த ரத பர்ஹிரத நந்தி முக தந்திமுக ப்ருங்கிரிடி சங்த நிகடம்
சனந்த சனக ப்ரமுக வந்தித பதம் பர சிதம்பர நடம் ஹ்ருதி பஜ

(பதஞ்சலி ஸ்தோத்ரம், ஒற்றைக்கொம்பும் காலும் -அரவு- இல்லாத எழுத்துக்களால் ஆனது) பதஞ்சலி முனிவர் பாம்பு உடலை உடையவர். ஒருமுறை நந்தி, பிருங்கி, தும்புரு முதலானவர்கள் பதஞ்சலியைக் காலும் கொம்பும் இல்லாதவர் என்று பரிகசித்தனராம். அதை நினைந்து முனிவர் இந்த சுலோகத்தை இயற்றினார் என்பர்.

நவ மணிகள் நிறைந்த கடகம். கிங்கிணிகள் ஜல், ஜல் என ஒலிக்கின்றன. மத்தளம் போன்ற வாத்தியங்கள் லயத்துடன் திமி, திமி எனச் சப்தம் இடுகின்றன. பல விதமான பறவைகள் நந்தி, பிருங்கி ஆகியோர் தொழுகிறார்கள். சனக, சனந்தர்போன்ற இருடிகள் திருவடிகளை வணங்குகிறார்கள். அந்தச் சிதம்பரத்தில் நட்டம் பயின்றாடும் கூத்தனை மனத்தில் இருத்துவோம்.

**தகவல்: திருத்தவத்துறை மறைமால்**



திருவக்கரை



பொருப்புமேட்டுப்பட்டி



திருவாலங்காடு

# ஸ்ரீ நடராஜர் மூர்த்தங்கள்



மதுரை



நல்லூர்




குளித்தலை



யஜவாம்



கீழக்காடு



வழுவூர்



திருவரங்குளம்

Courtesy: Nadarajah in art, thought and Literature by C.Sivaramamurti, National Museum, New Delhi

# இணையத்திலே கலசம்

அன்பான கலசம் வாசகர்களே!

இனி கலசத்தை நீங்கள் இணையத் தளத்திலே படித்து மகிழலாம். எந்த வயதினரும் முக்கியமாக இளம் வயதினரும் படிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் கலசத்தை இணைய தளத்திலே பிரசுரித்துள்ளோம். படிப்பதோடு நில்லாது, உங்கள் கருத்துக்கள், ஆக்கங்களையும் அவ்வப்போது எமக்கு அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். உலகின் எந்த நாட்டிலே இருந்தாலும் தவறாது கலசத்தை நீங்கள் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த முயற்சி எடுத்துள்ளோம்.

கலசம் மட்டுமன்றி சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஏனைய செயற்பாடு, செய்திகளையும் இனிமேல் நீங்கள் இணையத்திலே பார்வையிடலாம். இந்த இணையத் தளத்தின் வெவ்வேறு தொடர்பு பக்கங்களுக்குப் போய்ப் படித்து மகிழுங்கள். அறிவொளி வட்டம், நால்வர் தமிழ்ப் பாடசாலை, சங்கத்தின் சமய வழிபாடுகள் என்று அனைத்துச் செய்திகளும் பிரசுரமாக முயற்சி எடுத்திருக்கிறோம்.

Dear Readers,

Kalasam is now available on line. This is done with people of all ages, especially the younger generation in mind. We like people from all over the world to read Kalasm. We request you all to send your views and contributions to us. You can send your contributions either in Tamil or in English.

Saiva Munnetta Sangam does other community services as well. There is an 'Enlightenment Circle' which conducts classes in Yoga studies and Spiritual studies. Nalvar Tamil Kalai Nilayam - a Tamil school and regular prayer meetings are also conducted on a regular basis. You can read the details about these activities on line. The web addresses and the email address are given below.

எமது முயற்சி வெற்றிபெற உங்களுடைய ஆதரவு மிக முக்கியம். தயவு செய்து உங்கள் கருத்துக்களை எங்களுக்கு உடனுக்குடன் தெரிவியுங்கள்.

இணைய முகவரி:

www.saivamunnettasangam.com or www.smsuk.info

**மின்னஞ்சல் முகவரி:**

*kalasam @ gmail.com*


















சைவ முன்னேற்றச் சங்கம் UK









# சைவ முன்னேற்றச் சங்கத்தில் புதிதாக அமைந்துள்ள
# நடைபெற்ற மஹாகும்பாபிஷேகப்

(காட்சிகள்







# ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமானுக்கு பெருவிழா – 22-06-200

பக்கம் 21-26)








Saiva Munnetta Sang


aiva Munnetta Sangam (UK)
"Community Service through Hindu Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Charity No: 292085






சங்க மண்டபத்தில்
07 — 06 — 2008 அன்று நடைபெற்ற
சேக்கிழார் குருபூசையும்
பெரியபுராண நூல் வெளியீடும்



# அறிவொளிவளையம் நாடத்திய விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சி
## Entlightnment circle - Sports Day









## நால்வர் முதியோர் நிலையத்தில் கவுன்சிலர் போல் சத்தியநேசன் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு நிகழ்ச்சி



# கர்நாடக இசையில் தமிழ்ப் பாடல் ஆசிரியர்கள்

**ரிஷி சர்மா**

## கனம் கிருஷ்ண ஐயர் (1790-1854)

இவர் பதம் இயற்றுவதில் வல்லவர். முத்துத்தாண்டவர், சாரங்கபாணி, முவ்வா நல்லூர் சபாபதி ஐயர் ஆகியோருக்கு நிகரானவர். தமிழ் சேத்திரஞ்ஞர் எனப் பெருமைப் படுத்தப்பட்டவர். 73 கீர்த்தனைகள், பதங்கள். சிந்து. கலித்துறை ஆகியவற்றை இயற்றியுள்ளார்.

இவரின் புகழ் பெற்ற பாடல்கள் வேலவரே உமைத்தேடி (பைரவி). பாரெங்கும் பார்த்தாலும் (கல்யாணி). தெருவில் வரானோ (காம்போதி). நித்திரையில் சொப்பனத்தில் (பந்துவராளி). எல்லா அருமைகளும்(தோடி). ஜகஜ்ஜனனி சுகபாணி (ரதிபதிப்ரியா) ஆகியவை.

கனம் கிருஷ்ணையர் பாடுவதிலும் வல்லவராய்த் திகழ்ந்தார்.

## கோபாலகிருஷ்ண பாரதியார் (1810- 1896)

நாகைக்கு அருகிலுள்ள நரிமணம் கிராமத்தில் சிவராமபாரதியாரின் மகவாய்ப் பிறந்தார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் மாயூரம் வேதநாயகம் பிள்ளைக்கு அறிமுகம் செய்யப்பட்டு அவருடைய தூண்டுதலினால் நந்தனார் சரித்திர கீர்த்தனைகள் இயற்றினார். ஐயே மெத்த கடினம் (புன்னாகவராளி முதலிய இராகங்கள்). சற்று விலகி இரும்பிள்ளாய். வழிமறைத்து இருக்குதே ஆகியவை அதிலே சில பாடல்கள். மேலும் இரு இசை நாட்டியங்களும் எழுதியுள்ளார்.

ஆடும் சிதம்பரமோ (பேகாக்). எந்நேரமும் (தேவகாந்தாரி). காரணம் கேட்டுவாடி (பூர்விகல்யாணி). சபாபதிக்கு வேறு தெய்வம் (ஆபோகி). திருவடி சரணம் (காம்போதி) ஆகியவை அவருடைய பிர பலமான பாடல்கள்.

## கவி குஞ்சர பாரதி (1810-1896)

இராமநாதபுரம் மாவட்டம் பெருங்கரை என்ற கிராமத்தில் பிறந்தார். 12 வயதிலேயே பதம். கீர்த்தனைகள் இயற்றலானார்.18 வயதில் ஒரு நோயினால் தாக்கப்பட்டு அல்லலுற்ற போது தமது கிராமத்து இறைவியின் மேல் ஒரு பிரபந்தம் பாடி நோயிலிருந்து குணம டைந்தார். பிறகு அழகர் குறவஞ்சி என்ற நாட்டிய நாடகம் எழுதினார். அதில் இவன் யாரோ என்ற காம்போதி இராகப் பாடலும். மோகனவல்லி பந்தடித்தால் என்ற கமாஸ் இராகப் பாடலும் உள்ளன, ஸ்ரீ கந்த புராணக் கீர்த்தனை என்ற இசைநூலும் எழுதியுள்ளார். உன்னை அல்லால் என்ற சிம்மேந்திரமத்யமம் பாடலும் இவர் எழுதியது.

## கோடீசுவர ஐயர் (1870-1936)

கவி குஞ்சர பாரதியின் பேரன் இவர். சென்னை நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றிக் கொண்டே பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார். பட்டணம் சுப்ரமணிய ஐயர் ஆகியோரிடம் இசை பயின்றார்.

இவருடைய 72 மேளகர்த்தா ராகக் கீர்த்தனைகள் பிரசித்தமானவை. சாவேரி. தன்யாசி. பிலஹரி ஆகிய இராகங்களில் வர்ணங்கள் இயற்றியுள்ளார். தோடியில் வல்லுனராகையால் தோடிகோடி என்று அழைக்கப்பட்டார். கந்த ஞானமுதம் என்ற நூல் சிறப்பானது. வேலவா வா என்ற கீரவாணி இராகக் கீர்த்தனை பிரபலமானது. இவருடைய முத்திரை குஞ்சரதாசா என்பது.

## அம்புஜம் கிருஷ்ணா ( ? -1989)

தொழில் அதிபர் T.V.சுந்தரம் ஐயங்கார் அவர்களின் மருமகள். சமக்கிருதம், தமிழ் தெலுங்கு, மணிப்ரவாளத்தில் கீர்த்த னங்கள் இயற்றினார். அவருடைய பாடல்கள் கற்பனைத் திறம், மொழித் தூய்மை, எண்ணத்தெளிவு, இயற்கை நடை ஆகியவை மிகுந்தவை. இவருடைய பாடல்கள் கீதமாலா என்ற பெயரில் நான்கு பகுதிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சுமார் அறுநூறு பாடல்கள் உள்ளன.

குருவாயூர் அப்பனே (ரீதிகௌள), காண்பதெப்போ (பிலஹரி), மார்க்கம் காட்டிடுவாய் (ஹிந்தோளம்), ஓடோடி வந்தேன் கண்ணா (தர்மவதி), ஓம் நமோ நாராயணாய (கர்ணரஞ்சனி), புன்னகை ஒன்றே (ஹம்ஸானந்தி), வருக வருகவே (மோகனம்) ஆகியவை பிரபலமானவை.

- தகவல் தொடரும்

## சாவேரியும் அசாவேரியும்

திரு செம்மங்குடி அவர்கள் நான்கு பெரிய வித்துவான்களைக் குருவாக அடையும் பேறு பெற்றவர். அவர்களுள் ஒருவர் கோட்டு வாத்திய வித்துவான் திருவிடைமருதூர் சகாராமராவ் என்பவர். ஒரு நாள் திரு ராவ் அவர்களின் வீட்டுக்கு ஒரு பெரியவர் வந்தார். திரு ராவ் அவர்களை கொஞ்சம் கோட்டுவாத்தியம் வாசிக்கும்படி கேட்டார். அவர்களும் சம்மதித்து அசாவேரி இராகத்தை அழகாகக் கோட்டு வாத்தியத்திலே ஆலாபனை செய்தார்கள். வந்திருந்தவர் இடை மறித்து, ‘சாவேரி இராகத்துக்கும், அசாவேரி இராகத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டா?’ என்று கேட்டார். கோட்டுவாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தவருக்கு அவரின் கேள்வி எரிச்சலை ஊட்டியது. ஆனால் மிகவும் பொறுமையாக, ‘உண்டே’ என்று பதிலளித்துவிட்டுத் தொடர்ந்து அவரைப் பார்த்து, ‘ஐயாவுக்கு சாப்பாடு பரிமாறுவதற்கு உபயோகிக்கும் கரண்டி தெரியுமா?’ என்று கேட்டார். பெரியவரும் தாம் பெரிதாகக் கேள்விகேட்கப்போய் வித்துவான் தன்னை மதித்துப் பதில் சொல்லப்போகிறார் என்ற நினைப்பிலே ‘பேஷாத் தெரியுமே’ என்றார். வித்துவான் தொடர்ந்து ‘கிணற்றிலே செம்பு விழுந்துவிட்டால் எடுக்க உபயோகிக்கும் பாதாளகரண்டி தெரியுமா?’ என்று அடுத்த கேள்வி கேட்டார். அதேபோலப் பதில் வந்தது. ‘அது இரண்டுக்குமுள்ள தொடர்புதான் சாவேரிக்கும் அசாவேரிக்கும் உள்ள சம்பந்தமும்’ என்று முத்தாய்ப்பு வைத்தார் கோட்டுவாத்திய வித்துவான். சொன்னதோடு நிற்காமல் கோட்டுவாத்தியத்தையும் எடுத்து மூடிவைத்துவிட்டார். பெரியவரின் முகத்தில் அசடு வழிந்தது.

# திருவாசகத்துக்கு உருகிய திரு. G.U.போப்

*(1820 - 1908)*

திரு ஜி யூ போப் அவர்கள் சமயப் பிரசாரம் செய்யவெனத் தமிழ்நாட்டுக்கு வந்த ஒரு மதகுரு. தமிழாலும் திருவாசகத்தாலும் கவரப்பட்ட இவர் சைவராக மாறாதது அதிசயம் என்று அவரின் மேலிடத்திலிருந்த மதகுரு சொன்னதாகச் செய்தி ஒன்று உண்டு.
அந்தப் பெரியவரின் துயிலுமிடத்துக்குச் சென்ற லால்குடி திரு. வேதநாராயணன் அவர்களின் அநுபவம் கட்டுரையாக இங்கு பிரசுரமாகி உள்ளது.

1961ஆம் ஆண்டு கல்கி பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் திரு சோமு அவர்களும். திரு எம் கோபாலகிருஷ்ணன் அவர்களும் திரு போப்பின் சமாதியைக் காணச் சென்றார்கள். இடுகாடு மூடப்பட்டு இருந்தது. முயற்சி எடுத்துக் இடுகாட்டின் காவலரைச் சந்தித்து, உள்ளே சென்றார்கள். இடுகாடு உபயோகத்தில் இல்லாததால் அங்கு பதிவோ அல்லது கல்லறைகளின் பட்டியலோ இல்லை. பல கல்லறைகள் புதர்களால் மூடப்பட்டு இருந்தன. இங்கு 4000 கல்லறைகள் இருக்கின்றன. திரு சோமு, திரு கோபால கிருஷ்ணன், கல்லறைக் காவலர் ஆகிய மூவரும் போப் அவர்களின் கல்லறையைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். யூ மரத்தின் கீழ் அடர்ந்த புதர்களின் நடுவில் போப்பின் சலவைக்கல் கல்லறையைக் கண்டு பிடித்தனர். எழுத்துக்கள் மங்கி யிருந்தன. அருகிலிருந்து கொண்டு வந்த நீரில் தம் கைக்குட்டைகளை நனைத்துத் துடைத்தனர். அப்போது வாசகம் நன்றாகத் தெரிந்தது. தமிழர் முறைப்படி சமாதியை வலம் வந்து மரியாதை செலுத்தினர். காவலரும் கிறித்துவ முறையில் வணக்கம் செலுத்தினார்.

காவலரிடம் திரு சோமு கூறியது, "என் நண்பா! இக்கல்லறையை புதர் சூழ்ந்து கொள்ள விடாதே! எங்கள் மூதாதையர் ஒருவருடைய கல்லறை இது. அவருடைய வாரிசுகள் ஆயிரக்கணக்கில் தென் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார்கள். இங்கு வரும் எங்கள் சந்ததியினர் நாங்கள் அடைந்த இடையூறுகளைச் சந்திக்கக் கூடாது. அவ்வப்போது கொஞ்சம் எண்ணெய் தடவி இவ்வாசகங்கள் தெளிவாகத் தெரியும்படி வையுங்கள். உங்கள் செயலுக்காக நீங்கள் நன்றாக இருப்பீர்கள். எங்கள் நாட்டினர் உங்களுக்கு நன்றி செலுத்துவார்கள்."
-(சோமு. அக்கரைச்சீமை)

திரு ஜி யு போப் அவர்கள் 1839ஆம் ஆண்டு கிறித்துவமதப் போதகராக இங்கிலாந்திலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்தார். தூத்துக்குடி அருகில் உள்ள சாயர்புரத்திலே பணி புரிந்தார். தமிழ் மொழியின் வளத்தினால் ஈர்க்கப்பட்டுத் தமிழ் மாணவன் ஆனார். பல அரிய தமிழ் நூல்களை அச்சிட்டார். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை மொழி பெயர்த்தார். திருவாசகத்திற்குத் தன் மனதைப் பறிகொடுத்தார் என்றே சொல்ல

வேண்டும். 1882 ஆம் ஆண்டு இங்கிலாந்து திரும்பி, ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத் திலே தமிழ். தெலுங்கு விரிவுரையாளராக இருந்தார். 1908 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். அன்னாரது உடல் ஆக்ஸ்போர்ட் செயிண்ட் செபல்கர் இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இலண்டன் மாநகரின் ஒரு பகுதியாக பிரெண்ட் நகராட்சி உள்ளது. இந்த நகராட்சியின் நூலகத் துறையின் அங்கமாக வெம்பிளியில் உள்ள ஈலிங்கு ரோடு நூலகம் இயங்குகிறது. பிரெண்ட் நகராட்சி ஒவ்வொரு மொழிக்கும் வாசகர் வட்டம் தொடங்க ஊக்குவிக்கிறது. இந்நூலகத்திலே பல துறைகளில் சுமார் ஆயிரம் தமிழ் நூல்கள் உள்ளன. இங்கு பணியாற்றும் திருமதி யமுனா தருமேந்திரனின் சீரிய முயற்சியாற் கடந்த பதினெட்டு மாதங்களாக தமிழ் வாசகர் வட்டம் செவ்வனே நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாதமும் கடைசிச் சனிக்கிழமை வாசகர் சந்திப்பு நடைபெறுகிறது.

சென்ற மே மாதம் என் நண்பர், தாம்பரம் கிறித்துவக் கல்லூரியின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் திரு ராஜ கோபாலன் லண்டனுக்கு வந்திருந்தபோது எங்களுடைய வாசகர் வட்டத்தில் உரையாற்றினார். அப்போது தாம் ஆக்ஸ்போர்ட் சென்று திரு போப்பின் சமாதியைத் தரிசித்ததை விவரித்தார். பதினைந்து நாள்களுக்கு மட்டும் இந்நாடு வந்த ஒருவர் செய்த செயலை, நாற்பது ஆண்டுகளாக இங்கு இருக்கும் நாம் செய்யவில்லையே என்ற ஏக்கம் எங்களுக்கு ஏற்பட்டது.

திரு போப் மறைந்து நூறாண்டுகள் ஆகின்றன. இவ்வாண்டு அவருடைய சமாதிக்கு யாத்திரை மெற்கொள்வதென அப்பொழுதே தீர்மானித்தோம். சென்ற ஜுலை மாதம் 12ஆம் நாள் முப்பத்து மூன்று அன்பர்களுடன் நூலகத்திலிருந்து புறப்பட்டோம்.

கல்லறையை அடைந்தவுடன் அன்பர்கள் நீரினாலும் திரவ சோப்பினாலும் சமாதி யைத் தூய்மை செய்து, துடைத்து, உடன் கொண்டு வந்த மாலைகள், அங்க வத்திரம். விளக்குகள். புத்தகங்கள் ஆகியவற்றால் அலங்கரித்தனர். திரு நடராசன் அவர்கள் போப்பின் சேவைகளை நினைவுறுத்தினார். தமிழிலே பேசி, தமிழை வளர்ப்பது நம் கடமை என்று கூறினார். தமிழ்மணி அரங்கமுருகையன் அவர்கள் தெரிந்தெடுத்த பத்துக் குறள்களைக் கூறி திரு போப்பின் மொழிபெயர்ப்பையும் படித்தார். திரு சிவ தணிகாசலம் அவர்கள் நாலடியாரிலிருந்து சில செய்யுள்களைப் படித்தார். திரு வேதநாராயணன் அவர்கள் செல்வி ராணி ஆகியோர் திருவாச கத்திலிருந்து சில பாடல்களைப் பாட, திரு போப்பின் மொழிபெயர்ப்பையும் படித் தனர். புலவர் அமுது, திரு சம்பந்தன் (ஆசிரியர். சுடரொளி ). திருமதி புனிதா பாலசுந்தரம், ஆக்ஸ்போர்ட் சேகர் ஆகியோர் திரு போப்பின் வாழ்க்கைக் குறிப்புக்கள் சிலவற்றைத் தெரிவித்தனர். திரு தருமேந்திரன் அவர்கள் போப்பின் மேல் தான்இயற்றிய கவிதையைப் படித்தார். திருமதி யமுனா தருமேந்திரன் நன்றி கூறினார். யாத்திரை இவ்வாறு நிறைவுற லண்டன் திரும்பினோம்.

நூற்றாண்டு நினைவுச் சின்னக் கல் ஒன்றைப் பதிக்க கல்லறை மேற்பார்வை யாளரிடம் வேண்டுகோள் விடுக்க உள்ளோம்.

# திருவனந்தபுரம்

# ஸ்ரீ பத்மநாப சுவாமி கோயில்

## கேரள பயணக்கட்டுரை

சாவகச்சியூர் டாக்டர் கதிர்காமநாதன்

திருவனந்தபுரம் கேரள மாநிலத்தின் தலைகநகரமாகும். திரு அனந்தன் புரம். அனந்தன் என்றால் ஆதிசேடனைக் குறிக்கும். அனந்த சயனன் என்று விஷ்ணுவைக் கூறுவர். ஆகவே



திருவனந்தபுரம் என்றால் விஷ்ணுவை எமக்கு நினைவூட்டுகிறது. விஷ்ணு என்றால் எங்கும் வியாபித்திருப்பவர் என்று பொருளாகும். இவர் காத்தல் தொழில் செய்பவர். திருவனந்தபுரத்தில் விஷ்ணு அனந்த பத்மநாபனாக படுக்கும் திருக்கோலத்தில் பத்மநாபசுவாமி கோயிலிலே சேவை செய்கின்றார். விஷ்ணுவிற்கு மூன்று திருக்கோலமுண்டு. நின்ற, இருந்த, படுத்த கோலங்களே. இதை நின்றான், இருந்தான், படுத்தான் என்று கூறுவர்.

நாங்கள் இக்கோயிலைத் தரிசிக்க சென்றபோது இரவு நேரமாகி விட்டது. எனினும் கோட்டையினுள் இருக்கும் பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டிய கோபுரம் முதலில் எமக்குத் தெரிந்தது. நாம் கோபுரத்தை வணங்கினோம். தமிழ்நாட்டு முறையில் கேரளத்தில் இக்கோபுரத்தை ஏழு அடுக்கில் அமைத்திருந்தனர். இது திருவரங்கம் கோயில் கோபுரம் போன்ற தோற்றமுடைய கோபுரமாகும். படிகளில் ஏறி கோபுரவாசலை அடைந்தோம். அப்போது காற்சட்டை, சேட் அணிந்து சென்றோரை சட்டையை கழற்றி செல்லும்படி அங்குள்ள அன்பர்கள் கூறுவதை அவதானிக்க முடிந்தது. வேட்டி இல்லாதவர்களுக்கு வேட்டி கொடுத்து உதவுவதாகக் கூறினார்கள். இது இந்துக்கள் மட்டும் பிரதானமாகச் செல்லும் கோயிலாகும். யாம் வேட்டி அணிந்து சென்றதால் நமக்கு தடை இல்லை. முதலில் பிள்ளையாரைக் கும்பிட்ட பின்னர் வீதியை சுற்றி மூலவரை தரிசிக்கச் சென்றோம். மூலவர் உயர்ந்த பீடத்தில் இருண்ட இடத்தில் இருந்தார். இவரை மூன்று வாசல்கள் வழியாகத்தான் தரிசிக்க முடியும். இது எமக்கு புதுமையான அநுபவமாக இருந்து. வேறொரு கோயிலிலும் இப்படி இருப்பதாகத் தெரியவில்லை. மூலவருக்கு ஒரு வாசல் தான் இருக்கும். பிரமாண்டமான உருவில் பதினைந்து மீட்டர் நீளத்தில் படுத்த கோலத்தில் சேவை செய்கின்றார் அனந்த பத்மநாபர். மூன்று வாசல்கள் மூலம் முறையே திருமுகம், திருக்கமலம், திருவடிகள் ஆகியவற்றைத் தரிசிக்கலாம். அங்குள்ள நம்பூதிரி ஐயா அவர்கள் தீபம் காட்டி, இவற்றை விளக்கி விவரித்தார்.

திருவனந்தபுரம் கேரள மாநிலத்தின் தலைகநகரமாகும். திரு அனந்தன் புரம். அனந்தன் என்றால் ஆதிசேடனைக் குறிக்கும். அனந்த சயனன் என்று விஷ்ணுவைக் கூறுவர். ஆகவே



திருவனந்தபுரம் என்றால் விஷ்ணுவை எமக்கு நினைவூட்டுகிறது. விஷ்ணு என்றால் எங்கும் வியாபித் திருப்பவர் என்று

திருவரங்கம் கோயில் கோபுரம் போன்ற தோற்றமுடைய கோபுரமாகும். படிகளில் ஏறி கோபுரவாசலை அடைந்தோம். அப்போது காற்சட்டை, சேட் அணிந்து சென்றோரை சட்டையை கழற்றி செல்லும்படி அங்குள்ள அன்பர்கள் கூறுவதை அவதானிக்க முடிந்தது. வேட்டி இல்லாதவர்களுக்கு வேட்டி கொடுத்து உதவுவதாகக் கூறினார்கள். இது இந்துக்கள் மட்டும் பிரதானமாகச் செல்லும் கோயிலாகும். யாம் வேட்டி அணிந்து சென்றதால் நமக்கு தடை இல்லை. முதலில் பிள்ளையாரைக் கும்பிட்ட பின்னர்

# திருவனந்தபுரம்

# ஸ்ரீ பத்மநாப சுவாமி கோயில்

## கேரள பயணக்கட்டுரை

சாவகச்சியூர் டாக்டர் கதிர்காமநாதன்

பொருளாகும். இவர் காத்தல் தொழில் செய்பவர். திருவனந்தபுரத்தில் விஷ்ணு அனந்த பத்மநாபனாக படுக்கும் திருக்கோலத்தில் பத்மநாபசுவாமி கோயிலிலே சேவை செய்கின்றார். விஷ்ணுவிற்கு மூன்று திருக்கோலமுண்டு. நின்ற, இருந்த, படுத்த கோலங்களே. இதை நின்றான், இருந்தான், படுத்தான் என்று கூறுவர்.

நாங்கள் இக்கோயிலைத் தரிசிக்க சென்ற போது இரவு நேரமாகி விட்டது. எனினும் கோட்டையினுள் இருக்கும் பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டிய கோபுரம் முதலில் எமக்குத் தெரிந்தது. நாம் கோபுரத்தை வணங்கினோம். தமிழ்நாட்டு முறையில் கேரளத்தில் இக்கோபுரத்தை ஏழு அடுக்கில் அமைத்திருந்தனர். இது

வீதியை சுற்றி மூலவரை தரிசிக்கச் சென்றோம். மூலவர் உயர்ந்த பீடத்தில் இருண்ட இடத்தில் இருந்தார். இவரை மூன்று வாசல்கள் வழியாகத்தான் தரிசிக்க முடியும். இது எமக்கு புதுமையான அநுபவமாக இருந்து. வேறொரு கோயிலிலும் இப்படி இருப்பதாகத் தெரியவில்லை. மூலவருக்கு ஒரு வாசல் தான் இருக்கும். பிரமாண்டமான உருவில் பதினைந்து மீட்டர் நீளத்தில் படுத்த கோலத்தில் சேவை செய்கின்றார் அனந்த பத்மநாபர். மூன்று வாசல்கள் மூலம் முறையே திருமுகம், திருக்கமலம், திருவடிகள் ஆகியவற்றைத் தரிசிக்கலாம். அங்குள்ள நம்பூதிரி ஐயா அவர்கள் தீபம் காட்டி, இவற்றை விளக்கி விவரித்தார்.

சளைக்காது பள்ளிகொண்ட பெருமாளைக் காட்டி விளக்க நம்பூதிரிகள் இருந்தனர்.

அனந்த சயன மாத்மியம் என்ற ஏட்டிலே இக்கோயிலின் தலபுராணத்தைக் காணலாம். திவாகமுனி என்பவரால் இத்தலம் ஆரம்பிக்கப்பட்டது என அறியப்படுகின்றது. இவரின் கடும் தவத்தால் விஷ்ணு இரண்டு வயதுள்ள ஆண்குழந்தையாகத் தோன்றினார். முனிவர் தன்னோடு இருக்க வேண்டும் என வேண்டினார். இதற்கு தனக்கு சிறிதளவு துன்பம் நேர்ந்தாலும் விலகுவதாக கூறி உடன்பட்டு வளர்ந்தது அக்குழந்தை. பூசை நேரத்தில் ஒரு நாள் குழந்தை சாளக்கிரமம் எடுத்துக் கடித்துக் குறும்பு செய்தது. முனிவர் கோபமடைய குழந்தை ஓட, முனிவர் அதனைத் தொடர அனந்தன் காட்டுக்குள் ஓடிச் சென்று அங்கு கடலோரத்திலுள்ள ஒரு இலுப்பை மரப்பொந்தினுள் மறைந்தது. மறையவும், மரம் விழுந்தது. அனந்தசயனத்தில் அக்குழந்தை காட்சியளித்தது. அதே கோலத்தில் முனிவர் சேவித்தார்.

இக்கோயிலில் வருடத்திற்கு இரு முறை பத்து நாள்கள் திருவிழா நடைபெறும். பங்குனி சித்திரை, ஐப்பசி கார்த்திகை மாதங்களில் இவை நிகழும். பத்மநாப சுவாமி, நரசிம்மர், கிருஷ்ணர் பவனிவருவார்கள். ஆறு வருடங்களுக்கு ஒரு முறை வரும் லட்சார்த்த தீபம் மிக பிரசித்தி பெற்றது. திருவனந்தபுரத்தைப் புகையிரத மார்க்கமாகவோ, பஸ் மூலமாகவோ எளிதில் அடையலாம் இரயில் நிலையத்திலிருந்து தெற்கே இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது இவ்வாலயம்.

**பரசுராமர் ஆலயம்**

திருவனந்தபுரத்திலிருந்து ஆறு கிமீ தொலைவில் இருக்கும் திருவல்லத்துக்குச் சென்றோம். இங்கு பரசுராமர் கோயில் இருக்கிறது. பரசு – மழு. மழுவைக் கோடரி என்பர். திருமாலின் ஆறாவது அவதாரமாகிய பரசுராமன் தோளிலே மழு தாங்கியிருப்பார். கேரளத்துக்கும் பரசுராமருக்கும் நிறைய சம்பந்தமுண்டு. இக் கோயிலில் சிவன், பிரம்மா ஆகியோருக்கும் சந்நிதி உண்டு. இங்கு பூசையில் நாங்கள் கலந்து தரிசித்தோம். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற வாக்குக்கு அணிகலமானவர் பரசுராமர். ஜமதக்னி முனிவரின் மனைவி ரேணுகாதேவி. ரேணுகாதேவி தன்னுடைய கற்பின் சத்தியால் ஆற்று மண்ணைக் குடமாக்கி நீர் மொண்டு ஆசிரமத்துக்குக் கொண்டுவருவார். ஒரு நாள் மேலே ஒரு கந்தர்வன் பறந்து போனபோது அவன் நிழலை ஆற்றிலே ரேணுகா பார்த்தார். உடனே, 'என்ன அழகு இந்தக் கந்தர்வனுக்கு?' என்று நினைத்தார். அன்று அவருக்கு குடத்தை மண்ணால் உருவாக்க முடியவில்லை. கணவர் நீர் கொண்டு வராமைக்குக் காரணம் கேட்க, குற்றத்தை ரேணுகா ஒப்புக்கொண்டார். முனிவர் சீற்றமடைந்து தாயைக் கொல்லும்படி புதல்வருக்கு ஆணையிட்டார். புதல்வர்கள் இதற்கு மறுத்துவிட்டனர். ஆனால் ஐந்தாவது பிள்ளையான பரசுராமர் தந்தையின் ஆணையேற்று தம் மழுவால் தாயின் சிரசை வெட்டிக் கொன்றார். மகிழ்ந்த முனிவர் பரசுராமரிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். தனக்குத் தாய் வேண்டுமென மொழிய, ரேணுகாவை உயிர்ப்பித்தார் முனிவர். இன்னும் ரேணுகாவின் தலை கோயிலில் அம்மன் முன் இருப்பதைக் காணலாம்.

# எழுத்துப் பிழையற...

தேவார திருவாசகங்களைப் பாடுவதற்குப் பல நெறிமுறைகள் இருக்கின்றன. பண்முறை, தூய்மை என்று பல விதிகளை ஆன்றோர் அமைத்துள்ளனர். அதுபற்றி இங்கே குறிப்பிடவில்லை. திருமுறைகளைப் பாடும்போது பிழையின்றிப் பாடுவது அவசியம். அதையே இங்கே குறிப்பிட விரும்புகிறோம். இது குறைகூறும் நோக்கம் அல்ல. பிழைகளைத் திருத்தி மேலும் இந்த நற்பணி வளரவேண்டும் என்ற நல்ல நோக்கிலேயே இந்தப் பகுதி கலசத்திலே வருகின்றது என்று சென்ற இதழிலே குறிப்பிட்டோம்.

அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே

- அருணகிரிநாதர்


**இனி இந்த இதழிலே,**

தோடுடைய செவியன் என்ற தேவாரத்திலே “உனை நாட்பணிந்து” என்றும் “பெண்மான் இவனன்றே” என்றும் பாடுவதைக் கேட்கலாம். சரியான தேவாரம் இதோ!

தோடுடைய செவியன் விடையேறி யோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசியென்
உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்
தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மான் இவனன்றே

எனக்குக் காட்சி கொடுத்து என் உள்ளத்தைக் கவர்ந்த இறைவன் தோடு அணிந்த உமை அம்மையைத் தன் இடப்பாகத்திலே கொண்டவன், இடப வாகனத்திலே வீற்றிருப்பவன், தூய வெள்ளை நிற சந்திரனைச் சூடியவன், சாம்பற் பொடியை தன் மேனி முழுவதும் பூசியவன், முன்னொரு காலம் பிரமனின் பூசையை ஏற்று அருளியவன். இவன் பெருமை மிக்க பிரமாபுரம் என்ற ஊரிலே இருக்கின்றான்.

Tamil Crossword Puzzle No.2



**Across:**

3 **Crescent Moon**

5 **Lotus flower**

6 **Another name for the Vedas**

7 **Happiness**

8 **Month**

9 **End item played in classical music**

4 **Pranavam**

**Down:**

1 God

2 Jaffna is famous for this tall tree

3 Lord Sivan gave this word to Suntharar to start his first song

4 Boat

6 Mind

Answers to Crossword Puzzle No 1.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வி | நா | ய | 2 க | ர் | ■ | ■ |
| க் | ■ | ■ | ட | ■ | ■ | ■ |
| 6 கி | ரி | ■ | வு | ■ | 4 தி | ■ |
| ர | ■ | 3 பி | ள் | ளை | யா | ர் |
| க | ■ | தா | ■ | ■ | க | ■ |
| ம் | ■ | ■ | 5 தா | ன | ம் | ■ |
| ■ | ■ | ■ | ய் | ■ | ■ | ■ |
| ■ | 7 தூ | ய் | மை | ■ | ■ | ■ |

# திருக்குறள் கற்போம்

## அதிகாரம் 7 மக்கட்பேறு

## Let us Learn Thirukkural

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற

We know of no blessing so great as the begetting of intelligent children who are capable of gaining the knowledge which ought to be gained.

எழுபிறப்பும் தீயவை திண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

No evil will touch even in seven reincarnations for those who are blessed with children of unstained character.

தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையால் வரும்

Children are the veritable riches of a person. Because, they pass to him by their acts all the merits they acquire.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்

Far sweeter than nectar is the porridge messed about by the tiny hands of one's chidren.

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

To caress the bodies of one's children is delight to one's body; to hear their words is delight to one's years.

குழல்இனிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

The flute is sweet, the harp is sweet', say those who have not listened to the childish chatter of their little children.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

The duty of a father to his son is to make him worthy to be foremost in the assembly of learned men.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது

The possession of inteliigence and learning by one's children is more pleasurable to all the wise men of the world, than even to oneself

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

Even more than she did when she gave birth to him, a mother rejoices on hearing her son spoken of as a perfect person.

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனுஞ் சொல்

The duty of the son to his father is to make people exclaim 'what austerities did this man's father perform?

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

# கலசம்
# KALASAM

இலவச காலாண்டிதழ்

## கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?

**இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!**

பெயர்: ..........................................................................

முகவரி: ..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

Donation:£...............

Postage: £...............

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Kalasam@hotmail.com

**Postage and admin**: **£10** (U.K/Europe); **£20** (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

## சீதை அவதரித்த கதை!

மிதிலையின் அரசர் ஜனகர். ஒரு முறை இவர், நிலத்தை கலப்பையால் உழுதபோது பெட்டி ஒன்று தட்டுப்பட்டது. அதைத் திறந்தால், உள்ளே அழகிய பெண் குழந்தை. பெரிதும் மகிழ்ந்தார் ஜனகர். குழந்தைக்கு சீதா என்று பெயரிட்டார்.


சீதாதேவி அவதரித்த புனித தலத்தின் பெயர் சீதா மடி.


ஜனகர் நிலத்தை உழும்போது சீதாதேவியைக் கண்டெடுத்த காட்சி, பளிங்குச் சிற்பமாக இங்கு இடம் பெற்றுள்ளது. சீதையின் மறு பெயர் ஜானகி. பருவம் எய்தினாள் ஜானகி. 'சிவதனுசைக் கையில் எடுத்து அதில் நாண் ஏற்றுபவர், ஜானகியை மணக்கலாம்!' என்று அறிவிப்பு வெளியிட்டார் ஜனகர். பலசாலி மன்னர்கள் பலரும் வந்தனர். ஆனால் எவராலும் சிவ தனுசை அசைக்கக் கூட முடியவில்லை.


ஜனகர், 'சிவதனுசில் நாணேற்றி ஜானகியைக் கரம் பற்றுவார் எவரும் இல்லையே!' என்று கவலையடைந்தார். இந்த நிலையில் ஸ்ரீ ராமலக்ஷ்மணருடன் மிதிலைக்கு வந்து சேர்ந்தார் விஸ்வாமித்திரமுனிவர். ஸ்ரீ ராமன் சிவதனுசைக் கையில் எடுத்து நாண் ஏற்றியதுடன் அதை முறிக்கவும் செய்தார். ஜானகி மகிழ்ந்தாள். பிறகு ஒரு ஸ்ரீ ராமனின் பெற்றோர் மிதிலை வந்தடைந்தனர். பங்குனி உத்திர தினத்தன்று ஸ்ரீ ராமர் சீதாதேவி திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது.



சாரங்கன் ஜெயதாசன்
வயது 8
கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலை






சாரங்கன் ஜெயநாதன்
வயது 8
கிங்ஸ் ரன் தமிழ்ப் பாடசாலை


லட்சுமி (Laksmi)
விநுஷா கணேஸ்வரம்
(Vinucha Ganeswaran)

# TEMPLES

***What is significant in temples?***

***The concept of the temple as a place of worship is common to the whole of India, Sri Lanka and other countries where Hindus live. It derives from the Vedas and the Puranas and found expression in many ways before the first rock temple was excavated and the first structural temple built there after.***



***God exists. He is the creator and controller. His grace gives us happiness and peace. His wrath brings about sorrow and suffering. Mankind all over the world has cherished this belief in some form or other. Once it is conceded that such a God exists, there must be an easy means of approaching Him and propitiating Him. That is the temple. The temple is the structure we put up, with devotion, for the residence of God when He descends to this world for our sake. It is something like the camping of the king of a State in a part of his territory.***

***To step over the threshold of a Hindu temple is to enter the world between sleeping and waking. Temples are meant for the welfare of the nation. They preserve cultural and spiritual value among the masses. Devotion to God permeated every aspect of our art forms, ie. Music and Dance. In short, temple is a sacred religious institution where all our faculties are nobly and purposefully utilised for mutual harmony and welfare.***

***The temple is the focus for all aspects of everyday life in the Hindu community - religious, cultural, educational and social. The temple is also the place where one can transcend the world of man.***

***Hindus believe that their lives are merely stages in the progression to ultimate enlightenment. The temple is a place where God may be remembered, approached and where divine knowledge can be discovered. All aspects of the Hindu temple focus on the goal of enlightenment and liberation - the principles of design and construction, the forms of its architecture and decoration, and the rituals performed. All of these are determined by ancient texts called shastras compiled by the priests, the Brahmins. The vastushastras were theoretical and idealised descriptions of the architectural traditions and conventions to be followed.***



***Tamil Inscriptions on a pillar at Kancee's kailasanathar temple***

***What is the Role of Temples?***

***The Hindu temples have been the most prominent public institution in South India down the centuries. Until recently it was the centre of most of the people's activities, not only religious, but also educational, social and economic. Thousands of inscriptions engraved on its walls help in writing history not only the fanes but also of the land and the people. Manuscript records often fail, but there are the temple inscriptions and temple traditions to rely upon.***

***Old Tamil life cannot be visualised without temples. The close link between Tamil literature and Hindu temple is a feature down the centuries.***


***What is the significance of temple design/construction?***

***The temple is designed to dissolve the boundaries between man and the divine. Not merely his abode, the temple 'is' God, and therefore by implication the whole universe is identified with the temple's design and actual fabric. The ground plan is perhaps the best example.***

***The vastushastras describe it as a symbolic, miniature representation of the cosmos. It is based on a strict grid made up of squares and equilateral triangles, which are imbued with deep religious significance. To the Indian priest-architect the square was an absolute and mystical form. The grid, usually of 64 or 81 squares, is in fact a mandala, a model of the cosmos, with each square belonging to a deity. The position of the squares is in accordance with the importance attached to each of the deities, with the square in the centre representing the temple deity; the outer squares cover the gods of lower rank in that temple.***

***The construction of the temple follows in three-dimensional form of exactly the pattern laid out by the mandala. The relationship between the underlying symbolic order and the actual physical appearance of the temple can best be understood by seeing it from above which was of course impossible for humans until quite recently.***

***Thiruvannamalai Temple view.***



***Another important aspect of the design of the ground plan is that it is intended to lead from the temporal world to the eternal. The principal shrine should face the rising sun and so should have its entrance to the east. Movement towards the sanctuary, along the east-west axis and through a series of increasingly sacred spaces is of great importance and is reflected in the architecture.***

***What does the structure of temple represent?***
***The structure of a temple is highly symbolical. Primarily it indicates God as the Cosmic Person. The Garbhagriha or sanctum sanctorum is where the deity resides. It has no windows, thus symbolically representing that God is to be found within oneself, not outside. There is a veil hiding the deity from view. This represents the ignorance (or Paasam) of man which prevents oneself (Pasu) from realising God (Pathi). Only a priest (the Guru) can lift the veil of ignorance and make the man realise God. This enlightenment of man is represented by the only lighting inside the sanctum, the Aarthi, shown by the priest (the Guru). Similarly, every activity in the temple, in addition to eliciting devotion to God, has a meaning and shows the way to realise Godhead.***



***In temples consecrated according to scriptural rites, the images are considered to be alive. Hence, formal worship is a must. This worship ranges from one to nine times per day, depending on the extent and resources of the temple. On special festival days, celebrations are conducted. Biggest of such celebrations is termed Brahmotsava. The Rathotsava or temple car festival is also held during this period.***

***How should one visit temple? How should one conduct within it?***
***Those who want to visit the temple are expected to enter it physically clean and with the proper mood of faith and devotion. Walking silently straight to the sanctorum, and after offering, they should come out and then circumambulate the shrine. Formal obeisance (prostration) should be done from a place outside the flagpost. Then, they should visit the minor shrines and spend some time in meditation, sitting in a secluded spot on the northeastern side of the temple. It is incumbent on the visiting devotees to maintain the purity and sanctity of the temple.***

***Why are temples situated in hills, by rivers and in caves?***
***Besides the ground plan there are other important aspects of the temple, which connect it to the phenomenal world - its site in relation to shade and water, its vertical elevation relating to the mountains, and the most sacred part, the garbagriha, relating to caves.***
***Sacred sites in India are usually associated with water, shade and lakes. These are often considered to have healing and purifying powers. Rivers such as the Ganges are thought to have descended from the heavens, perhaps the Milky Way, and their sacred water is needed in the temple tank.***

***There was an impulse to create soaring towers that looked like mountain ranges. Mount Kailasa in the Himalayas is the celestial abode of Shiva and the Kailasa temple at Ellora use the architectural interpretation of this mountain.***

*Mount Arunachala with Tiruvanamalai temple complex at the base*



*In India caves have always been thought of as places of great sanctity. Most of the earliest surviving Buddhist, Jain and Hindu shrines are rock cut caves. In later Hindu temples the garbagriha is designed to resemble a cave. It is small and dark and the surfaces of the walls are unadorned and massive. It is a place that encourages meditation, which is possible only in solitude.*

*Approaching the shrine is a movement from open spaces to a confined small space; from profusion of visual form and decoration to the visual simplicity of the cave. From this sanctuary the implied movement is vertical, to the symbolic mountain peak directly above the image of the god. This movement upwards is linked to the idea of enlightenment, which is identified with the crowning final of the temple - the amalaka or sikara.*

*Most ancient stone temples were the result of royal patronage. Though they were built for the benefit of the whole community, they were also an expression of the devotion and piety of the ruler. It was thought that by building a temple the patron would always have peace, wealth and sons. It also ensured fame. Sometimes temples were built to celebrate important events. In the early eleventh century, for example, the Chola king Rajendran built Shiva temple at Gangaikonda cholapuram to celebrate his victory at war.*


*Gangai Konda Cholapuram Temple.*






*The moortis (depictions of the deities in a temple) provide access to the divine. It is interesting to note that it was not the sculptor or painter who was honoured for this work as he would be in the west, but the donor. In fact, almost all Hindu art is anonymous.*

*Do the 'Murtis' in the temple face certain direction?*

*Commonly swami faces the East or West. Only two Swamis face South, and they are called Rajas. One is Nataraja in Chidambaram; the other is Rangaraja in Sri Rangam*


Master, the people of Mayilapur suffer due to failure of monsoon. In what way shall I help them?
To mitigate the killing hunger of the poor, throw open your paddy barn at once.
I have faith that my stranded ship will be restored if your revered hands touch the rope. Kindly come to the port with me,
Valluvar grabbed and pulled the rope singing "Ellah, Elelo". Elelasingan and others joined in the effort.
"Eliah, Elelo".
"Eliah, Elelo".
"Eliah, Elelo".
The ship was restored.
One evening Elalasingan and Mullai met in a garden and fell in love at first sight.


Oh, Primal Deity, Purely Wiseone, Occupying the flower of the mind of the devotee, Void of desire or aversion, Destroyer of the desires of the five senses, Incomparable, Gracious being of the sea of virtue, Of eight attributes, Oh, god, I worship thee.




Courtesy: International Tamil Language Foundation

(To be continued)




Sri Valli's ஸ்ரீவள்ளி

345 High Street North, Manor Park, London E12 6PQ
76 Church Road, Manor Park, London E12 6AF

வண்ணம் நிறைந்த மலர்கள்

கண்ணைக் கவரும் நகைகள்

வள்ளிக்கு வந்தால்

அள்ளிப் போகலாம்







Tel: (44) 208 471 5011

Tel: (44) 208 514 7777

# Western Jewellers



**OPENNING HOURS**
**Monday to Saturday**
**10.00am - 6.30pm**

**Sunday**
**11.00am - 5.30pm**



*Jewellers & Gem Merchants*

**230,UPPER TOOTING ROAD**
**LONDON SW17 7EW**
**PHONE : 020 8767 3445**



# Silk Emporium



**122 UPPER TOOTING ROAD**
**LONDON SW17 7EN**
**PHONE : 020 8672 1900**



# WESTERN
## JEWELLERS & TEXTILES

**5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,**
**WEMBLEY, MIDDLESEX HA0 4YA.**
**PHONE : 020 8903 0909**



இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி : 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 10-08-2008 அன்று வெளியிடப்படுகிறது.